வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.09.2023 சனிக்கிழமை | இதழ் : 294 | பக்கங்கள் : 16

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## முல்லைத்தீவு நீதிபதி பதவி துறப்பு விவகாரம்:

# யாழ்ப்பாணத்தில் புதனன்று மனித சங்கிலி போராட்டம்!

## தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக முடிவு

## முல்லைத்தீவை முடக்கவும் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30

**முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா உயிர் அச்சுறுத்தல்கள் - அழுத்தங்களால் பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறினார். இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் மனித சங்கிலி போராட்டத்தையும் பின்னர் முல்லைத்தீவை முடக்கும் போராட்டத்தையும் நடத்த தமிழ்த் தேசியக் கட்சிகள் முடிவு செய்துள்ளன.**

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நடந்த சந்திப்பிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

இதில், இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில், எம். ஏ. சுமந்திரன் எம். பி., வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், கலைய முதன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பங்காளிக் கட்சியான புளொட் சார்பில் அதன் தலைவரான த. சித்தார்த்தன் எம். பி, பா. கஜதீபன், ரெலோ கட்சியின் சார்பில் தி. நிரோஷ், ஈ. பி. ஆர். எல். எவ் சார்பில்

11



## முல்லைத்தீவு நீதிபதி விவகாரம்:

## கிளிநொச்சியில் திங்களன்று பெரும் கண்டன போராட்டம்!

கிளிநொச்சி, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு கிளிநொச்சி பழைய கச்சேரி முன்பாக கண்டன போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் கிளிநொச்சி

11

## நீதிபதி சரவணராஜா விவகாரம்:

## சி. ஐ. டியிடம் விசாரணை கோர சட்டத்தரணிகள் சங்கம் முடிவு!

கொழும்பு, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு ஏற்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் தொடர்பில் உடனடியான விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப்புலனாய்வு பிரிவை கோருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தின் தலைவர் கௌசல்ய

11

## மின் கட்டணத்தை உயர்த்த மின்சார சபை கோரிக்கை!

### பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, செப். 30

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கை தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர்

11

## நீதிபதி சரவணராஜா தாமாகவே சட்டமா அதிபரை சந்தித்தார்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ சொல்கிறார்
### அவர் 5 வழக்குகளில் பிரதிவாதியாம்

கொழும்பு, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தானாக முன்வந்து சட்டமா அதிபரை சந்தித்தார். அத்துடன், அவர் கொழும்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் இருவரையும் அவர் சந்தித்தார் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்


பிபிசி சிங்கள சேவைக்கு அவர் வழங்கிய கருத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து வெவ்வேறு வழக்குகளில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டார். இதன் காரணமாக அவர் தானாக முன்வந்து சட்டமா அதிபரை ஆலோசனைக்காக

11

## தமிழ் இளைஞர்கள், யுவதிகளை நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தி

### சுரேஷ் பிறேமசந்திரன் சாடல்



கொழும்பு, செப். 03

நீதிபதி நாட்டை விட்டு வெளியேறியமை எதிர்காலத்தின்மீது ஓர் அச்ச நிலைமையை ஏற்படுத்துகிறது. இந்த நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் இளைஞர், யுவதிகளை நாட்டை விட்டு வெளியேற்றுவதற் குக்கூட இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இதை பயன்படுத்தலாம் - என்று ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அரசாங்கம் ஒத்திசைவாகத்தான் இருந்தது. அவர்கள் மீன்பிடி படகுகளில் அவுஸ்திரேலியா போவதற்கும் அரசாங்கம் ஓரளவுக்கு

11

## மக்களுக்கு கிடைக்கும் நிவாரணம் நிரந்தரமல்ல!

### ஐ. எம். எவ். கூறியது என்கிறார் சம்பிக்க

கொழும்பு, செப். 30

நாட்டு மக்களுக்கு தற்போது கிடைத்து வரும் நிவாரணங்கள் நிரந்தரமானவை அல்ல என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இரண்டாவது தவணை கடனை வழங்க தீர்மானிக்கவில்லை என சர்வதேச

11



## வல்லிபுர ஆழ்வார் சமுத்திர தீர்த்தம் பல்லாயிரக்கணக்கானோர் திரள்வு!

வடமராட்சி, செப். 30

வரலாற்று பிரசித்தி பெற்ற வடமராட்சி - துன்னாலை - வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்றுமுன்தினம் தேர்த்திருவிழா

11

## இப்படியும் நடக்கிறது

ஒருவன் உயரமான மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டான்.

அவனை பக்கத்திலிருந்த அவனது வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர். அவனை வீட்டுக்கு கொண்டு போய்ச் சேர்க்கவும், டாக்டர் அங்கு வந்துசேரவும் சரியாக இருந்தது.

அங்கு வந்த டாக்டர் அவனைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு கவலையோடு சொன்னார்.

“மன்னிக்க வேண்டும். அவர் இறந்து விட்டார்” என்று.

ஆனால் அடிபட்டவனோ தன் கண்ணை விழித்துப் பார்த்து ‘நான் இறக்கவில்லை டாக்டர், உயிரோடுதான் இருக்கிறேன்” என்றான்.

அங்கிருந்த அவன் மனைவி, ‘வாயை மூடுங்கள், டாக்டருக்குத் தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்?” என்று அதட்டினாள்.

ஜெனிவாவில் வருடத்தில் இரண்டுதடவை நடக்கும் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர், யுத்தம் முடிவடைந்து பல வருடங்களாக நமது கவனத்தைப் பெற்றிருந்தது. வருடத்தில் இரண்டுதடவை எமது அரசியல் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தவறாது ஜெனிவாவிற்குச் சென்று வந்தனர்.

உலகில் தங்களையே மனித உரிமையின் காவலர்களாக காட்டிக்கொள்ளும் சில மேற்குலக நாடுகளின் பின்னால் நாமும் நமக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் வலம் வந்து கொண்டிருந்தோம்.

ஜெனிவாவில் மனித உரிமை பேரவைக்கு வெளியே நடைபெறும் சில ஆய்வுக் கூட்டங்களிலோ அல்லது பேரவையின் சில ஆய்வுக் கூட்டங்களிலோ கலந்து கொள்ள அனுமதி பெற்ற சர்வதேச அமைப்புகளுக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் அந்த நிறுவனங்களின் உதவியுடன் நம்மவர்கள் சிலர் உரையாற்றிய சம்பவங்களும் உண்டு.

அப்போதெல்லாம் - அதாவது அப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோது சுமந்திரனோ அல்லது சிறிதரனோ ஜெனிவா சென்று அங்கிருந்து பரபரப்பான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்குகின்றபோது அது பற்றி தமிழ் தேசிய மக்கள் முன்னணி விமர்சிப்பதுண்டு.

அதிகம் ஏன், இந்த ஜெனிவா மனித உரிமை அமைப்பால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்று கூட விமர்சித்திருக்கின்றது.

ஆனால், அதே முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கே சென்று மனித உரிமைகள் பேரவையில் “கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ் நிலைகள்” தொடர்பில் நடந்த விடயம்- 4இன் கீழான கருத்தரங்கில் உரையாற்றியபோது தெரிவித்திருந்த கருத்துக்கள் நமது ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.

‘இலங்கை அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் திட்டமிட்ட சிங்கள - பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு துரிதகதியில் நடத்தப்பட்டு வருகின்றன.

குருந்தூர்மலையிலுள்ள தமிழர்களின் பழமையான வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு, அந்த இடத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இது போன்று சிங்கள மக்கள் வசிக்காத தமிழர் தாயகப் பகுதிகளான நாயாறு, தையிட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல்சமணங் குளம், கன்னியா வெந்நீரூற்று போன்ற இடங்களிலும் பௌத்த தலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு சட்டவிரோதமாக பௌத்த தலங்கள் கட்டப்படும் சில இடங்களில் அரச அனுசரணையுடனான சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.” என்று ஒவ்வொரு விடயங்களாக தமது உரையில் விளக்கியிருக்கிறார் கஜேந்திரகுமார்.

அவர் அங்கு ஆற்றிய உரையின் முழு வடிவத்தையும் மின் அஞ்சலில் அனுப்பிய நண்பர் ஒருவர், “இந்த உரையில் என்ன மாற்றத்தை கண்டீர்கள்?” என்று கேட்டிருந்தார்.

“இதில் என்ன மாற்றம் இருக்கின்றது? வழக்கமாக அவர் சொல்கின்ற குற்றச்சாட்டுக்கள். அது மாத்திரமல்ல, நமக்கும் தெரிந்தவைதானே. அதனை அவர் தனக்குரிய பாணியில் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதானே” என்று பதில் அனுப்பியிருந்தேன்.

அதற்கு அவர் பதில் அனுப்பினார், “இவ்வளவுதானா உங்கள் பத்திரிகை அனுபவம்?” என்று. எனக்கு எதுவும் புரியவில்லை.

தொடர்ந்து படித்தேன்.

‘யுத்தம் முடிந்து இன்று பதினான்கு வருடங்கள் முடிந்துவிட்டன. விடுதலைப் புலிகளின் பாதையில் தொடர்வதாக கூறிக் கொள்பவர்கள் அவர்கள். அதிகம் ஏன், கஜேந்திரகுமார்தான் அடுத்த தேசியத் தலைவர் என்ற அளவிற்கு தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் அவர்கள். இது வரை புலிகளின் துப்பாக்கிகள் உலகின் பல்வேறு தரப்பினராலும் மௌனிக்கப்பட்டதாகவே கூறிவந்தவர்கள் அவர்கள். இப்போது “இலங்கை அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு பதினான்கு ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில்,” என்று தொடங்கியிருக்கிறாரே. அந்த மாற்றத்தைத் தான் சொன்னேன்” என்று எழுதியிருந்தார்.

புலம்பெயர் மண்ணில் பிரபாகரனின் மகள் துவாரகா உயிருடன் இருக்கிறார் என சிலர் புரளியைக் கிளப்பிவரும் நிலையில், இவர்களின் இந்த மாற்றம் அவருக்கு உறுத்தியிருக்கிறதோ என்னவோ?

**-ஊர்க்குருவி.**

## தேர்த் திருவிழாவில் அரசகேசரிக்கு வரவேற்பு





யாழ்ப்பாணம், செப். 30

நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. யாழ்ப்பாண அரச வம்சத்தை சேர்ந்த முதலமைச்சர் அரசகேசரியால் நிறுவப்பட்ட பெருமைக்குரிய ஆலயம் இதுவாகும்.

இங்கு அரசகேசரிக்கு திருவுருவச் சிலையும் உள்ளது

தேர்த்திருவிழாவின்பொழுது அரசகேசரி வருகை தருவதாகவும் அவருக்கு பரிவட்டம் கட்டி (தலைப்பாகை அணிவித்து) வரவேற்பதாகவும் பாவனை செய்யப்பட்டது.

நீர்வேலியின் மூத்த சிவாச்சாரியார் வண. நீர்வை மணி கு. தியாகராஜ குருக்கள் ஆலய மூத்த குரு சிவஸ்ரீ சா. சோமதேவக் குருக்கள் மற்றும் குருமார் இணைந்து அரசகேசரியை வரவேற்பதாக மந்திரம் கிரியை பாவனை மேற்கொண்டு வழிபட்டனர். (அ)

## இலங்கையின் நீதித்துறைக்கு இதுவொரு கழுவமுடியாத கறை

### முன்னாள் எம். பி. சந்திரகுமார்

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா அவர்கள் தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ள செய்தி இலங்கையின் நீதித்துறைக்கு கழுவ முடியாத கறையாக படிந்துள்ளது.

நீதித்துறை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான தீர்ப்பினை அடுத்து உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

என ஊடகங்களில் செய்தி வெளிவந்துள்ளன.

குருந்தூர்மலை வழக்கில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் அண்மையில் தனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ள அவர் தான் நீதிபதி பதவியினை இராஜினாமா செய்துள்ளார்.

இந்த நிலைமை இலங்கை நீதித்துறைக்கு மிகப்பெரும் அவமானம் என்பதோடு, தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும் சம்பவமாகவும் காணப்படுகிறது.

எனவே இவ்வாறான நிலைமைகள் இனியும் நாட்டில் இடம்பெறாத வகையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதோடு, நீதித்துறை பணியாளர்களின் சுதந்திரமான பணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்படல்வேண்டும். தவறின் நாடு மேலும் மேலும் நெருக்கடியான சூழல் நிலைக்குள் தள்ளப்படுவதோடு, எக்காலத்தில் நிலையான சமாதானமும், இனங்களுக்களுக்கிடையே நல்லிணக்கமும் ஏற்படாது போய்விடும்-என்றார். (அ)

## கலாசாலை தொடங்கிய நாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை

யாழ்ப்பாணம், செப். 30

கோப்பாய் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் கல்லூரித் தினவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ. கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலாசாலையின் ஓய்வுநிலை பிரதிமுதல்வர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை பற்றிய சிறப்பாய்வு என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. அத்துடன் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்ட கலாதீபம் மாத இதழின் கல்லூரித்தின சிறப்புப் பிரதியும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் சமயத் தலைவர்களின் ஆசியுரை, நூற்றாண்டைக் குறிக்கும் முகமாக 100 நிறைகுடங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களுடனான ஊர்வலம், என்பன இடம்பெறவுள்ளதாகவும் கலாசாலையின் பழைய மாணவர்களை நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறும் நூற்றாண்டு விழா ஏற்பாட்டுக்குழுவினர் அழைத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
30.09.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் யோசனை

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கலந்தாலோசித்திருக்கின்றனர். இவ்வாறானதொரு யோசனையை ஈழநாடு ஏற்கனவே வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் கூட்டுத் தீர்மானமொன்றுக்கு தமிழ்த் தேசிய கட்சிகள் வரவேண்டும். பிரதான கட்சியான தமிழரசு கட்சி இந்த யோசனை தொடர்பில் ஆராய வேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவது என்பதுகூட இரண்டாவது விடயமே - ஆனால், முதலில் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் கூட்டுத் தீர்மானமொன்றுக்கு வரவேண்டும். பகிஷ்கரிப்பு கோரிக்கை தவறானது. அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான ஆண்டு. இந்தத் தேர்தல் இலங்கை அரசியலில் தீர்மானகரமான ஒன்றாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. 2020இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலானது சிங்கள தேசியவாதத்தின் எழுச்சியாக அமைந்தது. கோட்டாபய ராஜபக்ஷ சிங்கள வாக்கில் வெற்றிபெற்று தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவனாக பிரகடனம் செய்திருந்தார். ஆனால், பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட அதிருப்திகள் பிறிதோர் எழுச்சிக்கு வழிவகுத்தது.

ஒரு சிங்கள எழுச்சியால் அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ பிறிதொரு சிங்கள எழுச்சியால் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டார். ஆனால், சிங்கள தேசியவாத தரப்புகள் முற்றிலும் செயலிழந்து விட்டதாக கருதினால் அது தவறானது.

இந்த நெருக்கடியை சரி செய்யும், ஒரு மீட்பராகவே ரணில் விக்கிரமசிங்கவின் பிரவேசம் நிகழ்ந்தது. தென்னிலங்கையின் அரசியல் அரங்கிலிருந்து முற்றிலும் விளிம்பு நிலைக்கு சென்றிருந்த - ஒப்பீட்டடிப்படையில் பலவீனத்தின் உச்சத்திலிருந்தவரே ரணில் விக்கிரமசிங்க - ஆனால், எவருமே எதிர்பாராத வகையில் மீண்டும் ஜனாதிபதியானார். இது ரணிலின் ஆட்டத்திற்கான இறுதி சந்தர்ப்பம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பான சூழல் ரணிலின் பக்கம் உண்டு. ரணில் ஒரு பொது வேட்பாளராக வரக்கூடுமென்னும் பார்வையுண்டு. அதேவேளை ரணிலை எதிர்த்து போட்டியிடக் கூடிய இன்னொருவர், யாரென்பதும் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஒரு பலவீனமான வேட்பாளரால் ரணிலை தோற்கடிக்க முடியாது. அதேவேளை ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு இன்னும் சிலரும் வேட்பாளராக களமிறங்கக் கூடிய சூழலும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை தமிழர் தரப்புகள் எவ்வாறு கையாளப் போகின்றன? இந்தக் கேள்விக்கான பதில்தான் தமிழ் பொதுவேட்பாளர் யோசனை. இதனையோர் அரசியல் வேலைத்திட்டமாக மாற்ற வேண்டுமாயின் அனைத்து தமிழ் தேசிய தரப்புகளும் முதலில் இது தொடர்பில் உரையாடுவதற்கு தயாராக வேண்டும். மக்கள் மத்தியில் இதனை ஒரு பொதுக் கருத்தாக மாற்ற வேண்டும்.

ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தலாம் என்னும் யோசனைகூட, தென்னிலங்கையை திரும்பிப் பார்க்க வைக்கும். ஏனெனில், இன்றைய சூழலில் தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றிக்கு அடிப்படையானது. 2015இல் ஏற்பட்டவாறான ஓர் அரசியல் நிலைமை மீளவும் ஏற்படப் போகின்றது. சூழ்நிலையை சரியாக கையாள்வதுதான் அரசியல். அரசியலில் சரி பிழையென்பது ஒரு குறிப்பிட்ட காலத்தின் தீர்மானங்களிலேயே தங்கியிருக்கின்றது. இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஜனாதிபதி தேர்தலை ஒரு பேரம் பேசும் ஆயுதமாக கைக்கொள்வதற்கான வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கின்றது. இந்தக் காலத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றோம்?

# வடமராட்சி கிழக்கில் மாதா சொரூபம் உடைப்பு

வடமராட்சி, செப். 30

வடமராட்சி கிழக்கு - செம்பியன்பற்று தனிப்பனை வடக்கில் தனியார் காணிக்குள் இருந்த மாதா சொரூபம் மூன்றாவது தடவையாகவும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

நபர் ஒருவர் மதுபோதையில் அட்டகாசம் செய்வதாக மருதங்கேணி பொலிஸில் காணி உரிமையாளர் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாடு செய்ததை அறிந்த மது போதையில் இருந்த நபர், நேற்றுமுன்தினம் இரவு காணிக்குள் அத்துமீறி நுழைந்து அங்கே நிறுவப்பட்டிருந்த மாதா சொரூபத்தை அடித்து நொருக்கியுள்ளார்.

குறித்த நபர் மாதா சொரூபத்தை மூன்றாவது தடவையாக அடித்து நொறுக்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ-2)

# இருதய நோயால் இறப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 30

இருதய நோயால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்களுக்கான பணியகத்தின் சமூக மருத்துவ நிபுணர் ஷெரீன் பாலசிங்கம் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

2020 ஆம் ஆண்டில் மாத்திரம் அரச மருத்துவமனைகளில் 52 சதவீதமானோர் இருதய நோயால் உயிரிழந்தனர் என்று பதிவாகியுள்ளது. இதில் அதிகமானோர் 18 வயது முதல் 39 வயதுக்கு உட்பட்ட ஆண்களும் பெண்களும் ஆகும்.

மேலும், இருதய நோயாளியை விரைவாகக் கண்டறியும் வழிமுறைகளை கல்வி பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒலி மாசுபாடு இருதய நோய்க்கான முக்கிய காரணமாகும். ஒலி மாசுபாட்டை தடுக்க வேண்டும். இக் காலகட்டத்தில் மன அழுத்தங்களும் இருதய நோய்க்கு காரணமாக காணப்படுகின்றது. உடலில் வலி ஏற்படல் சுவாசிப்பதில் சிரமம் மற்றும் மார்பு சோர்வு ஆகியவை மாரடைப்பின் அறிகுறிகள் என கொழும்பு தேசிய மருத்துவமனையின் இருதய நோய் நிபுணர் மருத்துவர் அனிது பத்திரண தெரிவித்துள்ளார். (ஐ)

# புத்தக அரங்க விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 30

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் புத்தக அரங்க விழா சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

மூன்றாம் நாளான இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. இதில், ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு, கலாபூஷணம் முருகேசு சடாட்சரம் நினைவு அரங்கில் பிரபல கலைஞரும், தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தின் தலைவருமான கலைவாரிதி எஸ். உதயச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூல் அறிமுக உரைகளை கலாநிதி ந. இரவீந்திரனின் "இலங்கைத் திணை அரசியலில் வர்க்கப் போராட்டம்" என்ற ஆய்வு நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத் துறையின் விரிவுரையாளர் கலாநிதி ம. திருவரங்கன், வ. சிவஜோதியின் "என் எண்ண ஓட்டத்தில்..." என்ற கட்டுரைத் தொகுப்பு பற்றி எழுத்தாளரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான அராலியூர் நிலா, வயிரமுத்து திவ்விய ராஜனின் "ஒரு சின்னக் கதைஷ" சிறுகதை தொகுப்பு தொடர்பாக சமூக செயற்பாட்டாளர் சத்தியமலர் இரவீந்திரன் , செ. இளங்கோவின் "இலங்கையின் சமகாலத் தமிழ் அரசியல் அரங்கு" நூல் தொடர்பாக கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன் ஆற்றவுள்ளனர். நிகழ்ச்சித் தொகுப்பை லக்சிகா சிவாஸ்கரன், இராசசுந்தரம் வேணுஜன் ஆகியோரும் மேற்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து, மாலை 5 மணியளவில், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், ஆசிரியர் பு.கணேசராசா எழுதி, நெறியாள்கை செய்யப்பட்டு, முப்பதுக்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட, தேசிய அளவில் பல விருதுகளையும் வென்ற "தலையெழுத்து" நாடகமும், முதலாவதாக இந் நிகழ்வில் அரங்கேறுகின்ற "குந்திதேவி" நாடகமும் இடம்பெறும்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 30 சனிக்கிழமை**
சோபகிருது வருடம் - புரட்டாதி 13
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**இடபம்**
அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றி கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்று வீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப் பார்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பழைய பிரச்னைகள் தலைதூக்கும். வியாபாரத்தில் புது முடிவுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். போராட்டமான நாள்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்ய தொடங்கு வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள். அமைதி நிலவும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், வியாபா ரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக் கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். சில நுணுக்கங்களை கற்று கொள்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர் கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் நினைப்பதை முடித் துக் காட்டுவீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனை விக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். வியாபா ரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உழைப்பிற்கு அங் கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பது நல்லது. சிக்கனம் தேவைப்படும் நாள்.

# தமிழகத்துக்கு காவிரி நீர் திறப்பு; கண்டித்து கர்நாடகா முடங்கியது

## திரையுலகினரும் திரண்டு ஆர்ப்பாட்டம்

பெங்களூர், செப். 30

தமிழகத்துக்கு காவிரி நீர் திறக்கப்படுவதைக் கண்டித்து கர்நாடகாவில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடை பெற்று வருகிறது. இந்தப் போராட்டத்துக்கு கன்னட திரையுலகம் ஆதரவு தெரிவித் துள்ளது. நடிகர் சிவராஜ் குமார் தலைமையில் கன்னட திரையுல கினர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தை ஒட்டிய எல் லைப் பகுதிகளில் கன்னட அமைப்பினர், விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தி வரு கின்றனர்.

முழு அடைப்பு காரணமாக் தமிழக - கர்நாடகா இடையே யான போக்குவரத்து கடுமை யாகப் பாதிக்கப்பட்டுள்ளன.


பெங்களூரில் கன்னட அமைப்புகளை சேர்ந்தவர்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்களில் ஈடுபட்டுள் ளனர். சாலை மறியல் நடத்து கின்றனர். இதுவரை போராட்டங் கள் அமைதியான முறையி லேயே நடைபெற்று வருகின் றன. ப்ரீடம் பார்க் பகுதியில் மட்டுமே போராட்டங்கள் அனுமதிக்கப்படுவதால் அத் தனை போராட்டக்காரர்களும் அங்கேயே குவிகின்றனர். அப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள் ளன.

இதனிடையே, காவிரி மேலாண்மை சபையின் அவ சர கூட்டத்தில், தமிழகத்துக்கு, 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்" என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரி வித்துள்ளார்.

(ஐ)

# சாதிவாரி கணக்கெடுப்பை மொழிவாரியாகவும் நடத்துக

## நாம் தமிழர் சீமான் வலியுறுத்து



திருவாரூர், செப். 30

சாதிவாரி கணக்கெடுப்பு டன் சேர்த்து மொழிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும் என நாம் தமிழர் கட் சியின் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் வலியுறுத்தியுள் ளார்.

திருவாரூரில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற சீமான், "சாதி வாரி கணக்கெடுப்பு எடுப்பது அவசியமான ஒன்று. முதலில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் கர்நாடகாவிலும், தி. மு. க. ஆட்சி நடைபெறும் தமிழகத் திலும் நடத்த ராகுல் காந்தியும், முதல்வர் ஸ்டாலினும் முன்வர வேண்டும். சாதி வாரி கணக்கெ டுப்புடன் சேர்த்து மொழிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும்.

30 கோடி மக்கள் தொகை இருக்கும்போது 534 எம்.பி தொகுதிகள் உருவாக்கப்பட் டன. மக்கள் தொகை தற்போது 130 கோடியாக உயர்ந்த நிலை யிலும் 534 தொகுதிகள் என்பதை எப்படி ஏற்க முடியும். எனவே, 6 சட்டப்பேரவைத் தொகுதிக ளுக்கு ஒரு எம்.பி என்பதை 3 தொகுதிகளுக்கு ஒரு எம். பி என மாற்றி அமைக்க முன்வர வேண்டும்.

இதன் மூலம் அனைத்து சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும். நாம் தமிழர் கட்சியை பொறுத் தவரை காங்கிரஸும், பா. ஜ. கவும் தான் முதல் எதிரி. தி. மு. கவும், அ. தி. மு. கவும் உள்ளூர் எதிரி. இவர்களை எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம் - என்றார்.

(ஐ)

# பா. ஜ. க. - அ. தி. மு. க. பிளவு விரைவில் சரிசெய்யப்படும்!

## புதிய தமிழகம் கட்சி

சென்னை, செப். 30

தமிழகம், புதுச்சேரியில் 40இற்கு 40 இடங்களை வெல்ல முடியும். இத்தகைய சூழலில் அ. தி. மு. க. - பா. ஜ. க. இடையே பிரிவு ஏற்பட்டிருக் கக்கூடாது. இந்த பிரிவு கூட்ட ணியில் உள்ளஅனைத்து கட்சி களையும் ஏதாவதுஒரு விதத்தில் பாதிக்கத்தான் செய்யும். 2 கட் சிகளின் தலைமையிடம் மௌனம் நீடிப்பதால், பிரிவு சரிசெய்யப்படும் - என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ் ணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தி யாளர்களிடம் கூறியவை வரு மாறு,

அ. தி. மு. கவின் சில தலை வர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களுக்கும் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாம லைக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டு வார்த்தை போர் நடைபெற்றதால் தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து அ. தி. மு. க. விலகியுள்ளது.

இந்த பிரச்னைக்கு அண்ணா மலை மட்டுமே காரணம் இல்லை. சிறிய விரிசல் பெரியதாகிவிட் டது. இதில், சரிசெய்ய முடி யாத நிலை இல்லை. கூட்டணி தர்மத்தை அனைவரும் பின் பற்ற வேண்டும். கூட்டணியில் இருந்து கொண்டு அதில் இருப் பவர்களை விமர்சிப்பது கூடாது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி வலுவாக இருந்தால் தமிழகம், புதுச்சேரியில் 40இற்கு 40 இடங்களை வெல்ல முடியும். இத்தகைய சூழலில் அ. தி. மு. க.- பா. ஜ. க. இடையே பிரிவு ஏற்பட்டிருக்கக்கூடாது.

இந்த பிரிவு கூட்டணியில் உள்ளஅனைத்து கட்சிகளையும் ஏதாவதுஒரு விதத்தில் பாதிக் கத்தான் செய்யும். 2 கட்சிகளின் தலைமையிடம் மௌனம் நீடிப் பதால், பிரிவு சரிசெய்யப்படும் என எதிர்பார்க்கிறோம். ஒரு வேளை பிரிவு சரி செய்யப்படா விட்டால் அந்த நேரத்தில் புதிய தமிழகம் கட்சி உரிய முடிவு எடுக்கும் - என்றார்.

(ஐ)

# பெரமுனவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து

கொழும்பு, செப். 30

**பொதுஜன பெரமுனவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என அதன் தற்போதைய தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



மக்குலேவே விமலனா மகா நாயக்க தேரரை நேற்று முன் தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்றுக் கொள்வதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான பிரச்னைகள் காணப்படவில்லை.

அத்துடன் சமூக ஊடகங்களில் கருத்துரைப்பதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது.

குறித்த விடயத்தில் தங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

(அ)

# வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறை கும்பல் தாக்குதல்

## 5 பேர் வைத்தியசாலையில்

கிளிநொச்சி, செப். 30

கிளிநொச்சி - திருவையாறு பகுதியில் கிணறு ஒன்று தொடர்பாக ஏற்பட்ட பிரச்னையை அடுத்து வீடொன்றுக்குள் நுழைந்து அடையாளம் தெரியாத சிலர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 20 பேர் கொண்ட குழுவினரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் முதலில் குறித்த வீட்டின் உடைமைகளை சேதப்படுத்தியுள்ளனர்.

அதனை தடுக்க முயன்ற போது வீட்டில் இருந்தவர்களையும் சந்தேகநபர்கள் தாக்கியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், சந்தேகநபர்கள் இதுவரையில், அடையாளம் காணப்படவில்லை.

இந்த நிலையில், தமது வீட்டுத் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணறு ஒன்று தொடர்பாக அயல் வீட்டார்களுடன், முரண்பாடுகள் காணப்பட்டதாக தாக்குதலுக்கு இலக்கானவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(அ)

# இறக்குமதி தடைகள் அடுத்த மாதம் நீக்கம்

கொழும்பு, செப். 30

வாகனங்கள் தவிர்ந்த ஏனைய இறக்குமதித் தடைகள் அடுத்த மாதத்திற்குள் நீக்கப்படும் என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

எதிர்பார்த்த அளவு பொருளாதார வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்த தன் பின்னர், வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திறந்த பொருளாதார கொள்கைக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்குவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டின் அந்நிய செலாவணியின் கையிருப்பை கருத்திற் கொண்டே, இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.

தற்போதைய நிலைமையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

எதிர்வரும் காலப்பகுதியில் அந்நிய செலாவணியின் கையிருப்பின் அடிப்படையில் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்-என்றார்.

(அ)

# பயங்கரவாதம் தொடர்பான சட்டங்கள் தேவையற்றவை

## க.வி.விக்னேஸ்வரன் கருத்து

யாழ்ப்பாணம், செப். 30

பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. மக்களைப் பாதிக்கும் இந்த கொடிய சட்டங்கள் சட்டப் புத்தகத்திலே இருக்கத் தேவையில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வீ. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தன்னுடைய பதவிக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாமென்ற பயம் ஜனாதிபதிக்கு இருக்கலாம் எனவும் அவர் கூறினார்.

யாழில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது அதற்கான் பதிலாக கொண்டு வரப்படுகிற பயங்கரவாத எதிரப்பு சட்டமோ இலங்கைக்கு தேவையில்லை.

ஏனெனில் கடந்த காலத்தில் ஜேவிபி கிளர்ச்சியின் போது கடந்த 78 ஆம் ஆண்டு தற்காலிகமாக கொண்டு வரபட்டதே பயங்கரவாத தடைச் சட்டம். அது சில காலம் மட்டும் தான் எனக் கூறி தற்காலிகமாக கொண்டு வந்திருந்தாலும் 44 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிறது.

ஆகவே பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. இந்தச் சட்டத்தால் தான் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றனர். எனவே இப்போது அது தேவையற்ற சட்டம் தான்.

எனினும் பயங்கரவாதம் நாட்டில் இருப்பதாக சொல்லி புதிய புதிய சட்டங்களை அரசிற்கு ஆதரவாக கொண்டு வருகின்றனர். ஏனெனில் அரசாங்கத்தை எதிர்க்கிற போது அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அல்லது அடக்கி ஒடுக்குவதற்கு அல்லது தண்டனை வழங்குவதற்காக இந்தச் சட்டங்களை கொண்டு வருகின்றனர்.

ஆகவே எம்மைப் பொறுத்த வரையில் பல சாதாரண சட்டங்கள் இருக்கின்ற போது அதனைப் பயன்படுத்துவதை விடுத்து இத்தகைய கொடிய சட்டங்கள் தேவையற்றது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் எமது மக்களை பயப்படுத்தி கஸ்ரப்படுத்தி தமது எதிரிகளை வேறு விதமாக கையாளும் வகையில் இத்தகைய சட்டங்களை கொண்டு வர நடவடிக்கை எடுத்தாலும் அந்தச் சட்டங்கள் என்பது சட்டப் புத்தகத்திலே இருக்கத் தேவையில்லை என்று தான் கூறுகிறோம்.

அதே நேரத்தில் இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற புதிய சட்டத்தை கொண்டு வருவதும் பின்னர் விடுவது அல்லது தாமதிப்பது என மாறி மாறி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதிலும் அயசதரப்பில் ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் ஏனையவர்கள் மற்றொரு கட்சியாகவும் இருக்கின்றனர். இதனாலேயே இந்த இழுபறி ஏற்பட்டு இருக்கலாம். ஆனாலும் இதனைக் கொண்டு தேவையற்றது தான்.

மேலும் இரு தரப்பு பிரச்னைகளாலும் தன்னுடைய பதவிக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பயம் ஜனாதிபதிக்கு இருக்கும். ஆகையினால் அதிகாரத்துடன் பதவில் இருப்பதற்காகவும் இந்த சட்டத்தை இழுத்து இழுத்து பயன்படுத்தலாம்-என்றார்.

(அ)

# நில்வள கங்கை பெருக்கெடுத்ததால் பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது



கொழும்பு, செப். 30

நில்வள கங்கை பெருக்கெடுத்ததால் மொரவக்க - போருபிட்டிய பிரதேசத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

போருபிட்டிய பிரதேசத்தில் 8 வீடுகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ள நிலையில், அங்குள்ள மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தெனியாய - அக்குரஸ்ஸ பிரதான வீதியின் ஒரு சில இடங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்தை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மொரவக்க - பரகடுவ பிரதான வீதியின் நில்வலா கங்கைக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பரகடுவ பாலத்தின் அடைப்பினை சுத்தம் செய்யும் பணியில் பிரதேச மக்கள் ஈடுபட்டனர்.

மொரவக்க - நெலுவ பிரதான வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளதோடு, இப்பாதையூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, மொரவக்க சந்தைக்கு அருகில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் இன்று சுற்றுலா தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 30

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுற்றுலா தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளதாக வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 1980 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் செப்ரெம்பர் 27 ஆம் திகதி உலக சுற்றுலா தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலை, கொரோணா தொற்றினுடைய தாக்கம் என்பவற்றினால் வட மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளாக உலக சுற்றுலா தினம் அனுஷ்டிக்கப்படவில்லை.

இதன்காரணமாக ஏனைய மாகாணங்களோடு ஒப்பிட்டு பார்க்கின்ற போது வடக்கு மாகாணத்தில் சுற்றுலா துறையினுடைய வளர்ச்சி, மற்றும் இது குறித்தவிழிப்புணர்வு என்பன மக்கள் மத்தியில் மிகக் குறைவாகவே உள்ளது.

எனவே இந்த ஆண்டு உலக சுற்றுலா தினத்தை சிறப்பான முறையில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் வெளிப்புறத்தில் இன்று சனிக்கிழமை கொண்டாடவுள்ளோம். இதன் போது பல்வேறு கலை நிகழ்வுகள், காட்சிக் கூடங்கள் என்பவற்றை நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்-என்றார்.

(அ)

# நீதிபதியின் பதவி விலகலால் ஆட்டம் கண்டுள்ள நீதித்துறை

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, செப். 30

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா, தன்மீது தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்த நாட்டின் நீதித்துறையினது சுயாதீன இயங்குநிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது. என பாராளுமன்ற உறுப்பினர், சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதிபதி சரவணராஜா கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்த போது தெரிவித்த கருத்துகளை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதிய பாராளுமன்ற உரையிலும், அதன்பின்னர் பொது வெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார்.

அதன் பின்னர் குருந்தூர்மலையில் தமிழர்கள் வழிபாடியற்றுவதற்கு, சட்டவரன்முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு



மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கிறேன்.

2000 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி சிறீநிதி நந்தசேகரன் மீது, இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை அடியொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒருவர் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையும் மெல்லமெல்ல இராணுவமயப்படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகிறது.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பதுபற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்-என்றார். (அ)

# 'ஜனாவின் வாக்குமூலம்' மட்டக்களப்பில் வெளியீடு!

மட்டக்களப்பு, செப். 30

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், நாளை முதலாம் திகதி 60 வயதை பூர்த்தி செய்யவுள்ள நிலையில், அன்று மட்டக்களப்பில் நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

ஜனாவின் வாக்குமூலம்-எனது 40 வருட போராட்ட, அரசியல் வரலாறு என்ற நூல் வெளியிடப்படவுள்ளது.

இதையொட்டி நாளை முதலாம் திகதி மட்டக்களப்பில் நடைபெறும் நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் செயலாளர் கி. துரைராசசிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் ஆகியோருடன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் நிகழ்வில் உரையாற்றவுள்ளனர். (அ)

# துப்பாக்கிகள் அனுமதி புதுப்பிக்கும் நடவடிக்கை முதலாம் திகதி ஆரம்பம்

கொழும்பு, செப். 30

துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை நாளை மறுதினம் ஆரம்பமாகி டிசெம்பர் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த தினத்தின் பின்னர் 2024 ஆம் ஆண்டிற்காக துப்பாக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, 2024 / 2025 வருடங்களுக்கான தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் பதிவுகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த தினத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் புதுப்பிப்பு நடவடிக்கைகளுக்கு தாமதக் கட்டணம் அறவிடப்படும் அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால்

## முல்லை நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் மனோ கணேசன் எம்.பி



கொழும்பு, செப். 30

நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சட்டத்தின் ஆட்சி என்பது அதிகார பகிர்வு, பொறுப்புக்கூறல் என்பன போன்ற மாற்றுக் கருத்துகள் கொண்ட விடயமல்ல.

இங்கே முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் உயிருக்கு அச்சுறுத்தல். நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்ச நஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடி சவால். ஜனாதிபதி ரணில், உடன் நாடு திரும்பி பதிலளிக்க வேண்டும். அத்துடன் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினமும் பதிலளிக்கவேண்டும்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# செங்கோலை வளைக்கலாம் என்போருக்குச் சாட்டையடி!

## முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம், செப். 30

போர்வெற்றி வீறாப்பில், ஆயுதக் குவிப்பின் எக்காளத்தில் நீதியை உடைக்கலாம். செங்கோலை வளைக்கலாம் என்போருக்குச் சாட்டையடி கொடுத்திருக்கிறார் நீதிபதி சரவணராஜா என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல் தொடர்பில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே. மாவட்ட நீதிபதி சரவணராஜா மேல் மகன். பொருளை ஒறுத்தார். பதவியை ஒறுத்தார். வசதிகளை ஒறுத்தார். வாழும் சூழலை ஒறுத்தார். கொள்கை வழி நிற்கிறார்.

தீர்ப்பை மாற்றி எழுதச் சொல்லி யாரைக் கேட்கிறாய்?, அநீதிக்குத் தலை வணங்குவேன் என நினைத்தாயோ?. அரசியல் அழுத்தங்களுக்காகச் சட்டத்தைப் புரட்டுவேன் என நினைத்தாயோ? அடிமை வாழ்க்கை என்றாலும் ஆணித்தரமான கொள்கை வாழ்க்கை வாழ்கின்றேனடா. போ.. போ.. நீயும் நீ தந்த பதவியும். நீ தந்த வாழ்க்கையும். உதறித் தள்ளிய ஆண் மகன் நீதிபதி சரவணராஜா. மனிதத்தின் மறுபிம்பம் நீதிபதி சரவணராஜா.

போர்த்துக்கேயர் ஆட்சியில் பசுவைக் கொன்று இறைச்சியைத் தரேன். கிறித்தவனாக மதம் மாறேன் என்ற ஆண் மகன் அன்றைய ஞானப்பிரகாசரின் வழிவந்தவர் இன்றைய நீதிபதி சரவணராஜா. அன்று கத்தோலிக்கரிடம் அடிமையாக இருந்தோம். இன்று புத்தர்களிடம் அடிமையாக இருக்கிறோம்.

நீறுபூத்த நெருப்பாக, ஊதினால் தீயாகும் தணலாக, விடுதலை வேட்கை உள்ளத்தில் கரந்துறைவதன் அடையாளங்கள் அன்றைய ஞானப்பிரகாசரும் இன்றைய சரவணராஜரும். ஞானப்பிரகாசர்களையும் சரவணராஜாக்களையும் இடையீடின்றி உருவாக்கும் இலங்கைச் சைவத்தமிழ்ச் சமூகம்-என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகலால் இலங்கை அரசின் கோரமுகம் அம்பலம்

## ரவிகரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, செப். 30

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலில் இலங்கை அரசாங்கத்தின் கோரமுகம் வெளிப்படுகின்றது என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இது குறித்து ரவிகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நீதிபதி சரவணராஜா பதவி விலகலில் இலங்கை அரசாங்கத்தின் கோரமுகம் வெளிப்படுகின்றது. நீதிபதிக்கே இந் நிலைமை என்றால் சாதாரண தமிழ் மக்கள் எவ்வளவு கொடூரமான அரசின் கீழ், கொடூரமான அரசாங்கத்தை நடத்திக்கொண்டிருக்கும் இனவாதிகளின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு.

இந்த விடயத்தில் நீதியின் பால் அவருக்கு கொடுக்கப்பட்ட மன அழுத்தங்கள், உயிர் அச்சுறுத்தல்கள் ஊடகங்கள் மூலம் வெளிவந்திருக்கின்றது. இப்படியான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து தமிழ் மக்களுக்கு இப்படியான நெருக்கடிகள் இலங்கையிலே ஏற்படுகின்றது என்பதை உணர்ந்து மக்களுக்கான தீர்வு திட்டங்களையோ அல்லது மக்கள் சுதந்திரமாக வாழ கூடிய நிலமையையோ ஏற்படுத்தி தரவேண்டும்-என்றார்.

# மக்கள் ஆணையை அறிய உடன் தேர்தல் நடத்துங்கள்

## பொதுஜன பெரமுன மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, செப். 30

**மக்களாணையை தெரிந்துகொள்ள அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.**

**கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை 2019 ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள்.

எமது ஜனாதிபதி கோட்டாபய எடுத்த தவறான தீர்மானங்களினால் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்று பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. பொருளாதார பாதிப்பை கொண்டு ஒரு தரப்பினர் நாட்டை பலவீனப்படுத்த முயற்சித்தார்கள்.

இந்நிலையில், பொருளாதார பாதிப்பு மத்தியில் நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்கு சாத்தியமான எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது.

தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது. அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது.

நாடு தற்போது ஸ்திரமடைந்துள்ளது. ஆகவே அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். பொருளாதார பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது. மக்களாணையை தெரிந்துக் கொள்ள அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்கு அழுத்தம் பிரயோகிப்போம்-என்றார். (அ)

# சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை!

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 30

நீதிபதியை அழைப்பதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரீ.சரணவராஜா பதவி விலகியமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;-

குருந்தூர்மலை விவகாரத்தில் அவர் வழங்கிய கட்டளைகளுக்காக உயிர் அச்சுறுத்தலையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டதாக தெரிவித்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா, சட்டமா அதிபர் தன்னை அழைத்து நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொண்டார் என்ற குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளார்.

நீதிபதியை அழைப்பதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரமில்லை, நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு மாத்திரம் அதற்கான அதிகாரமுள்ளது.

ஆனால் சட்டமா அதிபர் உண்மையிலேயே அழைத்திருந்தால் அது நீதித்துறையின் சுதந்திரத்தினை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயலும் அரசாங்கத்தின் நோக்கத்தை அது வெளிப்படுத்துகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது.-என்றார். (அ)

# நாணய நிதியத்தை மகிழ்விக்க மக்கள் மீது அதிக வரிச் சுமை!

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 30

சர்வதேச நாணய நிதியம் இன்னும் மகிழ்ச்சியடையவில்லை எனவும் அவர்களை மகிழ்விக்க அடுத்த ஆண்டு அரசாங்கம் மக்கள் மீது வரி சுமைகளை சுமத்த ஆரம்பிக்கும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சரளமாக கூறுவதென்றால், சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை.

இதனடிப்படையில் தற்போது நாட்டை விட்டு வெளியேறி வரும் தொழிசார் நிபுணர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. பல்வேறு தொழிற்நுட்ப விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் வரி அறவீடுகளை அதிகரிக்குமாறே சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் வலியுறுத்தினர்.

அதற்கமைய மின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. சமையல் எரிவாயு விலைகள் மற்றும் அத்தியவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இவற்றின் மூலம் பணம் சம்பாதிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை.



இந்த நடவடிக்கை மக்களுக்கு சுமை என்பதை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொள்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே அரசாங்கத்தின் பொருளாதார, அரசியல் கொள்கைகள் என அனைத்தும் தீர்மானிக்கப்படும்.

பாராளுமன்றத்தில் மத்தி வங்கி, ஊழல் எதிர்ப்புச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்டாலும் சர்வதேச நாணய நிதியம் திருப்தியடையவில்லை என்பதை காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் பச்சிளம் குழந்தைகள் அல்ல. அவர்களை ஏமாற்ற முடியாது.

குறிப்பாக ஊழல் எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் ஊழல் நின்றபாடில்லை என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மத்திய வங்கியின் சட்டமூலம் கொண்டு வரப்பட்ட போதிலும் அதன் நடவடிக்கைகள் இன்னும் சுயாதீனமாக்கப்படவில்லை.

இதனால், எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட வேண்டுமாயின் கட்டாயம் வரிகளை மேலும் அதிகரிக்க வேண்டும்-என்றார். (அ)

# சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்தமை பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

## ஒப்புக்கொள்கின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, செப். 30

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்டத்தின் ஆதிக்கம் சீர்குலைந்தமையும் காரணம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டம் தொடர்பான அறிவை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தேசிய சட்ட வாரத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன் தினம் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் சட்டத் தொழில் தொடர்பாக சாதாரண



மக்கள் மத்தியில் இருந்துவரும் பிழையான கருத்தை போக்குவதற்காக முன்னாள் நீதிபதி சீ,ஜே. வீரமந்திரியினால் 2006ஆம் ஆண்டில் இந்த தேசிய சட்ட வார திட்டம் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சட்டம் தொடர்பான அறிவு மக்களுக்கு தேவையாகும்.

தற்போது சட்ட உதவி ஆணைக்குழுவினால் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட சேவையை பெற்றுக்கொடுப்பதற்காக செயற்திறமையான வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறோம். அதற்காக ஐரோப்பிய சங்கம், ஆசிய மன்றம், யுனேஸ்கோ மற்றும் யூ.என்.டீ.பி நிறுவனங்களின் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறது.

அதேபோன்று மத்தியஸ்த சபை முறையை பலப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்கும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றிருக்கின்றன.

மேலும் கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்ட ஆதிக்கத்தின் வீழ்ச்சியும் காரணமாகும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இவ்வாறான வேலைத் திட்டங்களை நடத்துவது மிகவும் பிரயோசனமாகும்-என்றார். (அ)

# மிருகக் காட்சிச்சாலையை இலவசமாக பார்வையிடலாம்

கொழும்பு, செப். 30

ஒக்ரோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தெஹிவளை மிருகக் காட்சிசாலை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்ளை அன்றைய தினம் பார்வையிடுவதற்கு இலவச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் சிறுவர்களுக்காக பல விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேசிய மிருகக் காட்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ)

# மட்டக்களப்பில் சர்வதேச சைகை மொழி தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி!




மட்டக்களப்பு, செப். 30

சர்வதேச சைகை மொழி தினத்தினைகொண்டாடுமுகமாக செவிப்புலனற்றோர் சங்கங்கள் ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று முன் தினம் மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு செவிப்புலனற்றோர் அலுவலகம் முன்பாக ஆரம்பித்த இந்த விழிப்புணர்வு ஊர்வலம் மட்டக்களப்பு திருகோணமலை வீதி வழியாக மட்டக்களப்பு நகரின் பலவீதிகளிலும் பயணித்த பின் மட்டக்களப்பு நகர மண்டபத்தை சென்றடைந்தது.

இதன் பின்னர் எழுச்சி கொண்டாட்ட நிகழ்வுகள் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்றன. கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் இளம் குமுதன் வைபவ ரீதியாக இந்த நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். செவிப்புலன ற்றோர் எங்கு வேண்டுமானாலும் சைகை மொழியை பயன்படுத்தக்கூடிய உலகம் உருவாக்க வேண்டும் என்ற துணைப் பொருளில் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த செவிப்புலனற்றோர் சங்கங்களின் உறுப்பினர்கள் பெருமளவில் இந்த சைகை மொழி தின கொண்டாட்டங்களில் பங்கேற்றனர். மட்டக்களப்பு மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# அக்கரைப்பற்று இராமகிருஷ்ணவுக்கு பஸ்ஸை வழங்கினார் சஜித் பிரேமதாஸ




அம்பாறை, செப். 30

அக்கரைப்பற்று, ஸ்ரீ இராம கிருஷ்ண தேசிய பாடசாலைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க் கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ புதிய பஸ் வண்டி ஒன்றை நேற்று முன் தினம் வழங்கினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் "பிரபஞ்சம்" எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக சுமார் 6 மில்லியன் ரூபாய் பெறுமதியான குறித்த பஸ் வழங்கப்பட்டது.

இதற்கான சாதகமாக செயற்பாடுகளை திருக்கோவில் வலயக் கல்வி பணிப்பாளர் ஆர் உதயகுமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிராந்திய இணைப்பாளர் வெ.வினோகாந்த் ஆகியோர் முன்னெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சம்மாந்துறை அஹதியா விருது வழங்கும் விழா



அம்பாறை, செப். 30

சம்மாந்துறை அஹதியா பாடசாலையின் விருது வழங்கும் விழா அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக பங்கேற்றார்.

சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா நிறுவனம், பரிபாலன சபை மற்றும் மஜ்லிஸ் அஸ்-ஷூராவின் ஏற்பாட்டில், அஹதிய்யா பாடசாலைகளின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

32 அஹதிய்யா பாடசாலைகளைச் சேர்ந்த 300 மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த ஆளுநர், இந்நிகழ்வில் பங்குபற்றியது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது எனவும், அல் குரான் புனித நூலானது வாழ்க்கையில் ஒழுக்கத்தையும், அறநெறியையும் கற்பிக்கும் ஒரு புனித நூல் எனவும், இக்கற்கைநெறியை கற்றவர்கள் சமூகத்தில் பெரும் ஆற்றல் மிக்கவர்களாகவும், தமது வாழ்க்கையை சிறந்த முறையில் வழிநடத்துபவர்களாகவும் திகழ்வார்கள் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை என தெரிவித்தார். (அ)

# காத்தான்குடி கடற்கரை பால நிர்மாண பணிக்கு நிதி ஒதுக்கீடு



மட்டக்களப்பு, செப். 30

காத்தான்குடி கடற்கரை பால நிர்மாண பணிக்கான 25 மில்லியன் ரூபா போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவரும் சுற்றாடல் அமைச்சருமான நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட காத்தான்குடி கடற்கரை றிஸ்வி நகர் பிரதேச பாலமும் வீதியும் மிக நீண்ட காலமாக நிர்மாணம் செய்யப்படாமல் காணப்பட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களாக இப்பிரதேசத்தில் இருந்த அரசியல்வாதிகள் இந்த பால நிர்மாண பணியினை செய்யாது புறக்கணித்திருந்தனர்.

இப்பால நிர்மாணத்தின் முக்கியத்துவம் தொடர்பாக காத்தான்குடி மற்றும் பூநொச்சிமுனை பிரதசத்திலுள்ள மீனவர் அமைப்புக்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைப்புகள் கடந்த 2021 ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு இணைத்தலைவரும் சுற்றாடல் அமைச்சருமான நசீர் அஹமட்டிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதற்கு அமைய அமைச்சரின் வேண்டுகோளிற்கினங்க கடந்த 2021 ஆண்டில் இதற்கான மதிப்பீட்டறிக்கை மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருந்த போதும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இவ்வேலைகள் ஆரம்பிப்பது தடைப்பட்டிருந்தது.

அமைச்சரின் முயற்சியின் பயனாக கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி இப்பால நிர்மாணத்துக்கான மீள் மதிப்பீட்டறிக்கை மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக தற்போது ரூபா 25 மில்லியன் இப்பால நிர்மாணத்திற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை தரம் உயர்வும் கௌரவிப்பும்





மட்டக்களப்பு, செப். 30

கிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகா வித்யாலயத்தின் தரம் உயர்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன் தினம் நடைபெற்றது.

கிண்ணியா வலயத்தின் முக்கியமான பாடசாலை ஒன்றாகத் திகளும் அல் ஹிரா முஸ்லிம் மகாவித்தியாலயம் பல வருடங்களாக உயிரியல் விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்படாமல் இருந்தது இப்பிரதேச மாணவர்களின் கல்வியில் பெரும் வீழ்ச்சி ஏற்படுத்தியது.

தற்பொழுது 1ஏபி பாடசாலை தரம் உயர்த்தப்பட்டதோடு உயிரியல் விஞ்ஞான பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கனவேமாகாண வீதியில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் பல சாதனைகளைப் படைத்த மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபரின் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா சூரியம், கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம் கனி, பாடசாலை அதிபர்கள் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# பட்டிருப்பு வலயம் முதலிடம்!




மட்டக்களப்பு, செப் 30

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளை பெற்று முதலிடத்தை வென்றுள்ளது.

கந்தளாய் லீலாரத்தின மைதானத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்று கடந்த சனிக்கிழமை நிறைவடைந்த இந்த போட்டியில் முதலிடம் பெற்ற பட்டிருப்பு கல்வி வலயத்தில் செட்டிபாளையம் மகாவித்தியாலயம் 9 தங்கப் பதக்கங்களையும் களுதாவளை மகா வித் தியாலயம் 8 தங்கப்பதக்கங்களையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் கல்வி வலயம் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயங்கள் தலா 92 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை வென்றுள்ளன. (அ)

# அமெ. வெளிவிவகார அமைச்சின் 60 ஆயிரம் மின்னஞ்சல்கள் திருட்டு

கொழும்பு, செப். 30

**மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் மின்னஞ்சல் தளத்தில் ஊடுருவிய சீனாவைச் சேர்ந்த மோசடிப் பேர்வழிகள் அமெரிக்க வெளியுறவு அமைச்சின் கணக்குகளில் இருந்து ஆயிரக்கணக்கான மின்னஞ்சல்களைத் திருடிவிட்டதாக அமெரிக்க பாராளுமன்ற செனட் சபையின் ஊழியர் ஒருவர் கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**



வெளிவிவகார அமைச்சின் 10 வெவ்வேறான பக்கங்களில் இருந்து 60,000 மின்னஞ்சல்கள் திருடப்பட்டு இருக்கிறது என்று அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்து இருக்கிறார்கள் என்று செனட் ஊழியர் கூறியுள்ளார்.

என்றாலும் அந்த ஊழியர் தன் பெயரைக் குறிப்பிட மறுத்துள்ளார்.

திருடப்பட்ட கணக்குகளில் கிழக்காசியா, பசிபிக் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு கணக்குகள் கூட இல்லை என்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரே ஒரு பக்கத்தில் திருடப்பட்டு இருக்கிறது என்றும் அந்த ஊழியர் பகிர்ந்துகொண்ட மின்னஞ்சல் விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அமெரிக்க அதிகாரிகளும் மைக்ரோசொப்ட் நிறுவனமும் கடந்த ஜூலை மாதம் ஓர் அறிவிப்பை விடுத்தன.

சீன அரசாங்கம் தொடர்புடைய மோசடிப் பேர்வழிகள் கடந்த மே முதல் அமெரிக்காவின் வர்த்தக, வெளியுறவு அமைச்சுகள் உள்ளிட்ட ஏறக்குறைய 25 நிறுவனங்களின் மின்னஞ்சல் கணக்குகளைச் சட்டவிரோதமாக எட்டி இருக்கிறார்கள் என்று அவை கூறின.

எந்த அளவுக்குப் பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பது பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இந்த மோசடியில் சீனா பின்னணியில் இருக்கிறது என்று அமெரிக்கா புகார் தெரிவிக்கிறது. இதை சீனா மறுத்து வருகிறது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்கெனவே உறவு சரியில்லை. இந்நிலையில், இந்த விவகாரம் மேலும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது. (அ)

# சீன பாதுகாப்பு அமைச்சர் குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை

**பீஜிங்கில் இருந்து வெளியானது தகவல்**



சீன பாதுகாப்பு அமைச்சர் லீ ஷங்வூ, எங்கு மறைக்கப்பட்டுள்ளார், எங்கு தங்கியுள்ளார் என்பது தொடர்பில் எந்த தகவலும் தெரியவில்லை என அந்நாட்டின் தலைநகர் பீஜிங்கில் உள்ள பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன பாதுகாப்பு அமைச்சர் லீ ஷங்வூ ஒரு மாதத்திற்கு முன்பு இறுதியாக பொது இடத்தில் தோற்றியிருந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், கடந்த 22ஆம் திகதி தொடக்கம் அவர் காணாமல் போனதாகவும், இது வரை அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை எனவும் குறித்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சிறப்பு அறிவிப்பை வெளியிட சீன அரசு தவறியுள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் வூ கியான்,

“இந்த சம்பவம் தொடர்பில் தற்போது வதந்திகள் பரவி வருகின்றன.

பாதுகாப்பு அமைச்சரின் நிலை குறித்து தற்போது எதுவும் தெரிவிக்க முடியாது.” என தெரிவித்தார். (அ)



# வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாமல் உள்நாட்டில் பயணம் செய்யும் சீனர்கள்

பீஜிங், செப். 30

சீனாவின் விடுமுறைக் காலம் நெருங்குகிறது. பொதுவாக இந்த விடுமுறைக் காலத்தில் அந்நாட்டைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வர்.

ஆனால், இம்முறை பலர் உள்நாட்டிலேயே பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

சீனாவின் பொருளியல் வளர்ச்சி குறைந்திருப்பதை இது பிரதிபலிப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால் சீனாவைச் சேர்ந்த சுற்றுப்பயண முகவைகள் ஏமாற்றம் அடைந்துள்ளன.

ஆனால், பலர் உள்நாட்டிலேயே பயணம் மேற்கொள்வதால் உள்நாட்டு வர்த்தகர்கள் பலனடைவர் என்று கூறப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக வெளிநாடுகளுக்குச் செல்ல முடியவில்லை என்று சீனர்கள் பலர் கவலை தெரிவித்தனர். (அ)

# எத்தியோப்பியாவில் பட்டினியால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலி!

அடிஸ் அபா, செப். 30

கிழக்கு ஆபிரிக்க நாடான எத்தியோப்பியாவில் இரண்டு வருடங்களாக நீடித்த உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்ததன் பின்னர், அந்நாட்டின் டிக்ரே பிராந்தியத்தில் 1329 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.



உள்ளூர் சுகாதாரத்துறையும், மெக்கலே பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

உள்நாட்டுப் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள எத்தியோப்பியாவின் வடக்கு மாகாணமான டிக்ரேயின் தலைநகர் மிகேலியில் அண்மைக்காலமாக ஏற்படும் உயிரிழப்புகளுக்கு உணவுப் பற்றாக்குறை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

டிக்ரேயில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வசிக்கும் முகாம்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது, அங்கு 1,329 பேர் பட்டினியால் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிக்ரேயில் 88 துணை மாவட்டங்களும் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் 643 முகாம்களும் உள்ளன.

அனைத்திலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டால், பட்டினி மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எத்தியோப்பியாவில் 2 ஆண்டுகளாக நடைபெற்ற மோதலில் 80,000-த்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பிரதமர் அபை அகமது தலைமையிலான அரசாங்கத்திற்கு இடையில் இடம்பெற்ற மோதல் சர்வதேச நாடுகளின் முயற்சியால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. (அ)

# பாகிஸ்தானில் கண் அழற்சியால் 56,000 பாடசாலைகளுக்கு பூட்டு!

**மில்லியன் கணக்கான மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை**



இஸ்லாமாபாத், செப். 30

பாகிஸ்தானில் கண் அழற்சி பரவலைக் கட்டுப்படுத்த சுமார் 56,000க்கும் அதிகமான பாடசாலைகள் இவ்வாரம் முழுவதும் மூடப்படும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கண் அழற்சி காரணமாக கண்கள் சிவந்து போவது, கண்களில் அரிப்பு ஏற்படுவது, கண்களில் நீர் கசிவது, ஆகியவை ஏற்படுகின்றன.

சளி இருமல் வழியாக இந்த வைரஸ் பரவுகிறது.

இதன் காரணமாகவும் இந்த வைரஸூக்கு எதிராக மாணவர்களை பாதுகாக்கும் நோக்கிலும் இவ்வாறு பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, பஞ்சாப் மாநிலத்தில் மாத்திரம் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இருந்து 357,000 கண் அழற்சி சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மேலும், மில்லியன் கணக்கான மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# நீதிபதியின் இராஜினாமா நீதித்துறைக்கான சவால்!

## அங்கஜன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 30

**உயிர் அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாக தனது பதவிவை துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அறிவித்துள்ளமையானது, நாட்டின் நீதித்துறை எத்தகைய சவால்களை சந்தித்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் தெரிவித்தார்.**



சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதிக் கட்டமைப்பை பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியை தருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பதவி துறத்தலானது, பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்படவேண்டும் என்ற கடும்போக்குவாதத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது என்றும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நீதித்துறையையும் வளைத்துப்போடும் வகையில் சிலர் செயற்படும்போது அதை தடுக்காமல் நீதித்துறைக்கு காவலாக இருக்கவேண்டியவர்களே நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும்போது, நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சம் மக்களிடம் உருவாக்குகிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பணிப்புரைகளையே மீறிச் செயற்படக்கூடிய தரப்புகள் இந்நாட்டை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்றும் அங்கஜன் ராமநாதன் கூறினார்.

(அ-2)

## இரவு நேரம் கடல் அட்டைகள் பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது!




வடமராட்சி, செப். 30

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இரவு நேரத்தில் சட்டவிரோதமாக அட்டைகளை பிடித்த மூவர் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மன்னாரை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடமைகளுடன் மூவரும் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இரவு நேரத்தில் பல படகுகள் சட்டவிரோதமாக அட்டை பிடிப்பதாக கடற்படையினரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆயினும் பல படகுகள் தடை செய்யப்பட்ட இரவு அட்டை தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# 400 சிறுவர்கள் விபத்தில் பலி!

கொழும்பு, செப். 30

கடந்த 2022ஆம் ஆண்டில் மட்டும் 400 சிறுவர்கள் வீதி விபத்துகளில் உயிரிழந்தனர் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் பிரதிநிதி பேராசிரியர் சமத் தர்மரத்ன தெரிவித்துள்ளார்.



வீதி விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாட்டில் கடந்த 30 வருட கால யுத்தத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகும்.

அரசாங்கத்தினால் கிட்டத்தட்ட 180 கோடி ரூபாய் அளவில் வீதி விபத்துகளில் காயமடைந்தவர்களின் சிகிச்சைக்காக செலவிடப்படுகின்றது. 2016 முதல் 2018 வரையான காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் இலங்கையில் 24 ஆயிரத்து 786 பேர் உயிரிழந்தனர். 20 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நாளாந்தம் ஏறக்குறைய ஏழு முதல் எட்டு பேர் வீதி விபத்துகளில் உயிரிழக்கின்றனர். இவர்களில் 60 வீதத்துக்கும் அதிகமானோர் மோட்டார்சைக்கிள், சைக்கிளில் பயணித்தோரும் மற்றும் பாதசாரிகளுமாவர் என்றும் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

(ஐ)

# தேசிய கடன் முகாமைத்துவ நிறுவகம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, செப். 30

தேசிய கடன் முகாமைத்துவ நிறுவகம் ஒன்றை நிறுவு வதற்கு இந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

2022 ஆம் ஆண்டின் உப வரவு -செலவுத் திட்ட, நிறுவன சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, அரச கடன் முகாமைத்துவ நிறுவகத்தை உருவாக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியின் கட்டமைப்பிற்குள் கூட, கடன் முகாமைத்துவ மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது முதன்மையான முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த உத்தேச அரச கடன் முகாமைத்துவ நிறுவகத்தை நிறுவுவதற்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடன் நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கான திட்டம், கடன் நிர்வாகத்திற்கான நிறுவன அமைப்பு மற்றும் சட்ட கட்டமைப்பு அனைத்தும் இந்த கட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அரச கடன் முகாமைத்துவ சட்டத்தைத் தயாரிக்க சட்ட வரைவு ஆசிரியருக்கு அறிவுறுத்துமாறு செயல்நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

(அ)

# ஆஸாத் மௌலானாவை அழைத்து வரவேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, செப். 30

"ஆஸாத் மௌலானாவை இலங்கைக்கு அழைத்துவந்து, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.



கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமானது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மைகளை மூடி மறைக்க முற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும், மூடி மறைக்கப்பட்ட உண்மைகள் இன்று வெளியே வந்துக் கொண்டிருக்கின்றன. ஆஸாத் மௌலானா கூறிய கருத்துக்கள் உண்மையா - பொய்யா என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டுமெனில், முதலில் அவரிடம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவரை நாட்டுக்கு அழைப்பித்து விசாரணைகளை மேற்கொள்ளாமல், இன்னமும் உண்மைகளை மூடி மறைக்க அரசாங்கம் முற்படக்கூடாது. ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த மக்கள் மீதுதான் இந்த அரசாங்கம் ஆட்சி அமைத்துள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது- என்றார்.

(அ)

## கசிப்பு வியாபாரியின் வீட்டில் விருந்துக்கு சென்ற பொலிஸ் சார்ஜன்ட் பணி நீக்கம்!

கொழும்பு, செப். 30

கசிப்பு வியாபாரி ஒருவரின் வீட்டில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்டு வீடு திரும்பும் போது இளைஞர்கள் குழுவினால் தாக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிக்கவெரட்டிய பன்சியகம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சர்ஜன்ட் ஒருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கசிப்பு வியாபாரம் செய்வதாகக் கூறப்படும் நபரின் வீட்டில் விருந்தை முடித்துக் கொண்டு குறித்த பொலிஸ் சார்ஜன்ட் தனது வீட்டுக்கு திரும்பும் போது , அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் குழுவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் அதனையடுத்து இளைஞர் குழு பொலிஸை சரமாரியாக தாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்காளாகிய பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## நீதிபதி...

சந்தித்தார்.

அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்றால் நீதிபதி என்றவகையில் அவசியமான பிடியாணைகளை பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு உள்ளது. அவரது இராஜிநாமா குறித்து விசாரணைகளை மேற்கொண்டவேளை நீதிபதி சரவணராஜா ஒரு வாரத்துக்கு முன்னர் கொழும்பிற்கு வந்து தனது காரை விற்றார். இரண்டு வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்தார் என்பது தெரியவந்துள்ளது - என்றார். (ஐ)

## கிளிநொச்சியில்...

கிளையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் கிளை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டவை வருமாறு,

ஈழத்தமிழர்களின் மரபுவழித் தாயகப் பகுதியான குருந்தூர் மலையின் இருப்பையும் அங்கு தமிழர்கள் வழிபாடியற்றும் உரித்தையும் நிலைநிறுத்தியதற்காகவும் தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை நடத்துவதற்கு அனுமதித்ததற்காகவும் சிங்கள பேரினவாதத்தால் பழிவாங்கப் பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு ஏற்பட்ட இந்த நிலை, தமிழினம் சார்ந்து சிந்திக்கின்ற இனத்தின் இருப்பை நிலைநிறுத்த நியாயத்தின்பாற் பட்டு கடமையாற்றுகின்ற இன்னுமொரு தமிழ் நீதிபதிக்கு ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்த வேண்டிய கடமை எம் ஒவ்வொருவருவருக்கும் உள்ளது.

நீதியின் செங்கோலை, அதிகாரத் தரப்புகளுக்கும் சிங்கள பேரினவாதத்துக்கும் சாதகமாக வளைக்க மறுத்ததற்காக ஒரு தமிழ் நீதிபதிக்கு இந்த நிலை ஏற்படுத் தப்பட்டுள்ளது என்றால், இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழினத்தின் இருப்பு எவ்வளவு தூரம் சவாலுக்கு உட்ப டுத்தப்படும் என்பதுபற்றி சர்வதேச சமூகத் தின் கவனத்தைக் கோரும் வகையில் இந்தக் கண்டனப் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரையும் இணைந்து கொள்ளுமாறு அழைத்து நிற்கிறோம்.

இனத்தின் இருப்புக்காகப் பதவி துறந்திருக்கும் நீதிபதிக்காக சர்வதேசத்தின் நீதியைக் கோரத் தவறுவது, எங்கள் இனத்தின் இருப்பை இன்னும் வலுவிழக்கச் செய்யும் என்பதை உணர்வோம் - இணைவோம் - என்றுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாண...

சுரேஷ் பிறேமச்சந்திரன், சர்வேஸ்வரன், தமிழ் தேசிய கட்சியின் சார்பில் என். சிறிகாந்தா, சிவாஜிலிங்கம் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

நீதிபதிக்கு அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களை ஏற்படுத்தி அவரை பதவி துறக்கவும் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமையும் ஏற்படுத்தப்பட்டது. இந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் புதன்கிழமை - ஒக்ரோபர் 4ஆம் திகதி மிகப்பெரும் மனித சங்கிலி போராட்டம் நடைபெறும். மருதனார் மடத்திலிருந்து யாழ்ப்பாணம் நகரம் வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தை முடக்கிப் போராடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. எனினும், இந்தப் போராட்டம் எப்போது என்பது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த விடயத்தை ஐ. நா. மற்றும் சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு கொண்டு செல்வது என்றும் இதற்காக அனைத்து தமிழ்த் தேசிய கட்சிகளும் கையொப்பமிட்டு அனைத்து நாடுகளின் தூதரகங்களுக்கும் கடிதம் அனுப்புவது என்றும் தீர்மானித்துள்ளன. (ஐ)

# சிதைவடைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டது

மன்னார், செப். 30

மன்னார் - சிலாவத்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முத்தரிப்புத்துறை கடற்கரை ஓடைப் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்து பல நாட்கள் ஆகி சிதைவடைந்து எலும்புகள் தெரியும் வண்ணம் குறித்த சடலம் காணப்படுகின்றது.

முத்தரிப்புத்துறை மீனவர்களால் நேற்று வெள்ளிக்கிழமை இந்த சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடலுக்குள் வலை பாய்ச்சுவதற்காக சென்ற மீனவர்கள் குறித்த சடலத்தை கண்டுபிடித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட சடலம் தொடர்பாக சிலாவத்துறை பொலிஸாருக்கு மீனவர்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## மக்களுக்கு...

நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தனர். இதற்கு முன்னர் நடந்த கூட்டம் ஒன்றில் செப்ரெம்பர் 27 ஆம் திகதி நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான முடிவு கிடைக்கும் என கூறினேன்.

இந்த வழியில் செல்லுங்கள் என்று சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒரு வரைப்படத்தை வழங்கியுள்ளது. நாம் அந்த வழியில் பயணிக்கின்றோம்.

முதலாவது உடன்படிக்கை இந்த மாதத்துடன் முடிவடைகின்றது. அதன் முன்னேற்றத்துடன் நாம் புதிய உடன்படிக்கைக்கு செல்ல வேண்டும். அப்போதே சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணை கடன் கிடைக்கும். எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அப்படியான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடும் என்பதற்கான அறிகுறிகளை காண முடியவில்லை.

காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலத்தில் என்ன நடக்க போகிறது என்பது தெளிவில்லை. வருமானத்தை அதிகரிக்குமாறு நாணய நிதியம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

அரசாங்கம் வருமானத்தை அதிகரிக்கவில்லை என்றால், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாது. இலவச கல்வி, இலவச சுகாதாரம், நலன்புரி வசதிகள், சமுர்த்தி, அஸ்வெசும போன்றவற்றை செய்ய முடியாமல் போகும். வருமானத்தை அதிகரிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்த வருமானத்தில் சுமார் 15 வீதம் கிடைக்கவில்லை.

இதனால், வருமானத்தை இலக்கை அடையவில்லை என்ற எச்சரிக்கையை விடுத்துடன் தாம் திருப்தியடையவில்லை என்பதை சர்வதேச நாணய நிதியம் கூறியது. தற்போது வரிசைகள் இல்லை என்ற அனைவரும் நினைப்பார்கள். எரிபொருள் இருக்கின்றது. 24 மணி நேரமும் மின் விநியோகம் கிடைக்கின்றது. எரிவாயு, உரம் கிடைக்கின்றது. எனினும் இந்த நிவாரணங்கள் நிரந்தரமற்றவை என நாணய நிதியம் கூறுகிறது. நாடு உள்ளுக்குள் சரிந்து வருகிறது. நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக சுருங்கி வருகின்றது. இது சிறந்த எதிர்வுகூறல் அல்ல. சிவப்பு எச்சரிக்கை.

உலகில் எமக்கு கடன் வழங்கிய நாடுகள் உட்பட கடன் உரிமையாளர்கள் எம்மை பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஒரு நிறுவனம் வழக்கு தாக்கல் செய்துள்ளது. ஏனையோர் வழக்கு தொடர காத்திருக்கின்றனர்.

கடன் உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தி தீர்வுகாணும் வரை எமக்கு இரண்டாம் தவணை கடன் கிடைக்காது என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது என்றும் சம்பிக்க எம். பி. வத்தளையில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

# மலையக ரயில் சேவையில் பாதிப்பு

கொழும்பு, செப். 30

மலையகப் பாதையில் செல்லும் ரயில் சேவையில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பட்டிப்பொல ரயில் நிலையத்திற்கு அருகில் சீரற்ற காலநிலை காரணமாக ரயில் பாதையில் பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததாகவும், ரயில்வே ஊழியர்கள் மரத்தை அகற்றி சில மணித்தியாலங்களின் பின்னர் ரயில் போக்குவரத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## தமிழ்...

ஒத்திசைவாக இருந்திருக்கின்றது. அதிலும் பல நூற்றுக்கணக்கானோர் கடலில் மூழ்கியுள்ளார்கள். இப்போதும் கூட நீதிபதி அவர்கள் நாட்டை விட்டு வெளியேறியவது என்பது நிச்சயமாக நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தின்மீது நம்பிக்கை இன்மை ஏற்படுகிறது. எதிர்காலத்தின்மீது ஓர் அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த நாட்டில் இனிமேல் எங்களுக்கு நீதி கிடைக்குமா என்ற கேள்விகளை எழுப்பும். இவ்வாறான சூழ் நிலையில் இந்த மண்ணில் வாழ முடியுமா என்ற கேள்விகள் நிச்சயமாக இருக்கும். ஆகவே, இந்த நாட்டில் இருக்கக்கூடிய தமிழ் இளைஞர், யுவதிகளை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்குக்கூட இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இதை பயன்படுத்தலாம் - என்றார்.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா பதவி துறந்து நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்துக்கு எதிர்ப்பு வெளியிடுவது குறித்து நேற்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடி ஆராய்ந்தன. இந்த சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## சி.ஐ.டியிடம்...

நவரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா தான் வகித்த பதவிகள் அனைத்தையும் துறந்து உயிரச்சுறுத் தல் மற்றும் அழுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினார்.

இந்த விடயம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதால் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதாக பகிரங்கமாக அறிவித் திருக்கிறார். உண்மையில், அவருக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதா, அவ்வாறு காணப்பட்டால் அது யாரால் விடுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய தரப்புகள் யாவை என்பன தொடர்பில் விரிவான விசாரணையை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்தையும் நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவ தற்காக இந்தச் செயல்பாடு மிகவும் அவசியமாக உள்ளது. ஆகவே, குற்றப் புலனாய்வு பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## வல்லிபுர...

நடைபெற்ற நிலையில் நேற்று சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நடைபெற்றது.

பிற்பகல் 2:45 மணியளவில் வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்று பின்னர் அங்கிருந்து கற்கோவளத்து அடியவர்கள் ஒட்டமாக வல்லிபுர ஆழ்வாரையும் பரிவார மூர்த்திகளையும் ஆஞ்சநேயர் முன்னே செல்ல காவிச் சென்று சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள வங்கக் கடலிலே சக்கரத்தாழ்வார் தீர்த்தமாடினார்.

ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியர்கள் திருவிழாவில் சிறப்பு பூசைகளை மேற்கொண்டனர்.

இலங்கை போக்குவரத்து சபை, வடமராட்சி தனியார் போக்குவரத்து சேவை என்பன அடியவர்களுக்கான போக்குவரத்து சேவைகளை வழங்கியிருந்தன.

இதே போன்று பருத்தித்துறை பொலிஸார், இலங்கை முதலுதவி சங்கத்தினர், இந்து சமய தொண்டர் சபை, சாரணர்கள் , இலங்கை செஞ்சி லுவை சங்கத்தினர், முதலுதவி மற்றும் ஒழுங்குபடுத்தல் சேவைகளை வழங்கினர். மேலும் பருத்தித்துறை பிரதேச சபையினர் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். தாக சந்தி ஆலய சூழலில் மட்டுமன்றி வடமராட்சி எங்கும் அடிவர்களால் நேற்றுமுன்தினத்தில் இருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

பல அடியவர்கள் தூக்கு காவடி, பால் காவடி, கற்பூர சட்டி போன்ற பல்வேறு நேரத்திக்கடன்களையும் நிறைவேற்றினர்.

இன்று சனிக்கிழமை கேணி தீர்த்தத்துடன் பெருந்திருவிழா நிறைவு பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## மின்...

மஞ்சுளா பெர்னாண்டோவிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையை ஈடு செய்யும் வகையில், மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போனமையால், மின்சார உற்பத்திக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதாக மின்சார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர சில்வா தெரிவித்தார்.

இந்த வருடம் 4500 ஜிகாவகட் நீர் மின் உற்பத்தியை மேற்கொள்ள மின்சார சபை திட்டமிட்டிருந்தது.

எனினும், 3750 கிகாவாட் நீர் மின் உற்பத்தியையே இவ்வாண்டு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. இதற்கமைய, அனல் மின் நிலையங்களில் இருந்து 750 ஜிகாவாட் மின் உற்பத்தி திறனை கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும், அதற்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் கூடுதல் தொகையை ஈடுசெய்யும் வகையில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்ட தாக கலாநிதி நரேந்திர சில்வா தெரி வித்தார்.

இது தொடர்பான விரிவான தகவல்கள் எதிர்வரும் திங்கட்கிழமை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

மூன்றாவது மின் கட்டண திருத்தம் தொடர்பில் மக்கள் தமது கருத்துகளையும் யோசனைகளையும் எழுத்துமூலமாக எதிர்வரும் 18 ஆம் திகதி வரை முன்வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu

# இறைச்சிக்கு ஆடு, மாடுகள் இறக்குமதி செய்யத் திட்டம்!

கொழும்பு, செப். 30

நாட்டில் பால் மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பதற்காக பொருத்தமான இரண்டு வகை மாடுகள் மற்றும் ஆடுகளை அறிமுகப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பால் மற்றும் இறைச்சி உற்பத்திக்காக கால்நடைகளை இறக்குமதி செய்தாலும், நாட்டின் கால நிலை அவற்றுக்கு ஏற்புடையதல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அவை ஏனைய நோய்களுக்கு உள்ளாகி உயிரிழப்பதாகவும் விவசாய அமைச்சர் தெரிவித்தார். (அ)

# நாட்டில் சமூக ஊடகங்களை தணிக்கை செய்யக்கூடாது!

## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, செப். 30

சமூக ஊடகங்களை தணிக்கை செய்யக்கூடாது என பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

சமூக ஊடகங்களை தணிக்கை செய்யக்கூடாது. விமர்சனம் செய்யும் உரிமை அனைவருக்கும் உள்ளது. என்னை பற்றி எதனையும் கூறட்டும். எனக்கு எந்த பிரச்னையும் இல்லை எனவும் மகிந்த குறிப்பிட்டார்.

எது எப்படி இருந்த போதிலும் சமூக ஊடகங்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, கட்சியின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார். (அ)

# ஜேர்மன் அரச தலைவருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



பேர்லின், செப். 30

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜேர்மன் அரச தலைவர் ஓலாப் ஷோல்ஸ் ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் பேர்லினில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் இலங்கைக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான இராஜாதந்திர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இருநாட்டு தலைவர்களும் கலந்தாலோசித்துள்ளனர்.

அத்துடன், ஜேர்மன் அரச தலைவர் ஓலாப் ஷோல்ஸ் தலைமையில் நேற்று இடம்பெற்ற "பேர்லின் குளோபல்" மாநாட்டுடன் இணைந்த "பலமுனை உலகில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்" தொடர்பான அரச தலைவர்கள் கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதியின் பணி மனையின் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# நீதி அமைச்சர் உடனே பதவி விலகவேண்டும்!



## செல்வம் எம்.பி. கோரிக்கை

மன்னார், செப். 30

**நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையில் செயற்படுகின்றதா என்ற கேள்வியெழுவதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமாவில் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் எமவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், முறையான தீர்ப்பை வழங்கிய நீதிபதி அச்சுறுத்தப்பட்டதை வன்மையாக கண்டிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயல்பட வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால் தற்போது தமிழ் நீதிபதிகளுக்கு நியாயமாகச் செயற்பட முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன் அவர்களை அச்சுறுத்துகின்ற செயற்பாடுகளும் நாட்டில் இடம்பெறுகின்றன.

எனவே,நீதியமைச்சர் இந்த விடயத்தை ஆராயவேண்டும். முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் இராஜினாமாவில் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் - என்றார். (அ)

# இலங்கை நீதித்துறைக்கு அதியுச்சமான அச்சுறுத்தல்

## சுமந்திரன் எம்.பி. கண்டனம்



யாழ்ப்பாணம், செப். 30

இலங்கையின் சரித்திரத்தில் நீதித்துறைக்கு அதி உச்சமான ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது குறித்து கவனம் எடுக்கவேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் மொழிகள் மற்றும் சமூக அபிவிருத்தி பயிற்சி மத்திய நிலையத்தில் சிங்களமொழி கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மானிப்பாய் சுதுமலை பகுதியில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று காலை சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைக்கு பாராளுமன்றத்தின் நிறுவனமயப்படுத்தப்பட்ட பல விடயங்களில் பாராளுமன்றம் மட்டுமல்ல நீதித்துறை விசேடமாக ஒரு சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அது குறித்து கவனம் எடுக்கவேண்டிய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

முதல் முறையாக எங்கள் நாட்டின் சரித்திரத்தில் நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக அதுவும் தான் செய்த ஒரு தீர்ப்பின் அடிப்படையில் வந்திருக்கின்ற அச்சுறுத்தலின் காரணமாக நாட்டை விட்டு ஓடியதாக பத்திரிகைகள் சொல்லுகின்றன. இது நீதித் துறைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அதி உச்சமான ஒரு அச்சுறுத்தல்.

நாட்டில் இருக்கின்ற சுயாதீனமான நிறுவனங்களை பாதுகாக்கவேண்டிய பாரிய கடப்பாடு எங்கள் அனைவருக்கும் இருக்கின்றது. அத்தகைய சுயாதீனமான நிறுவனங்களில் பிரதானமானது நீதித் துறையாக இருக்கின்றது.

நீதித்துறையை பாதுகாக்கின்றபோது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் செய்வதை நாங்கள் கண்டிக்கவேண்டும்- தடுக்கவேண்டும். அதே வேளையிலே நீதித்துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அதனை திருத்துகின்ற வகையிலே நாங்கள் செயல்படவேண்டும். - என்றார். (அ)

# வடக்கு மாகாண உள்ளூர் உற்பத்தி பொருள்களின் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்செப். 30

வடமாகாண சுற்றுலாப் பணியகம், தொழிற்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுலா தினத்தினை முன்னிட்டு மாறி வரும் சுற்றுலா வளர்ச்சியில் வடமாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் சுற்றுலாக் கண்காட்சி இன்று யாழ் மத்திய கலாசார மையத்தில் வடமாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஆ.பத்திநாதன் தலைமையில் நடைபெற்றது

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடங்களை அங்குராப்பணம் செய்துவைத்தார்

இவ் கண்காட்சியில் 43 உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி செய்துள்ள பொருட்களின் கூடாரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதில் 18 உணவு சார்ந்த பொருட்களும்,25 கைவினை சார்ந்த உற்பத்தி பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

இதில் வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், மற்றும் உள்ளிட்ட துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (அ)





# மார்பகப் புற்றுநோயால் தினமும் 12 பெண்கள் பாதிக்கப்படுகின்றனர்

கொழும்பு, செப். 30

இலங்கையில் நாளொன்றுக்கு 12 பெண்கள் மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுவதாக புற்று நோயியல் நிபுணர்கள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் வைத்தியர் விமுக்தி பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன், 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பரிசோதனைகளுக்காக மார்பக சுயபரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் வைத்தியசாலைக்கு செல்வதன் மூலம் இந்த நிலையை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# தனுஷ்கவின் தடையை நீக்குவதற்கு பரிசீலனை

கொழும்பு, செப். 30

தனுஷ்க குணதிலகவுக்கு விதிக்கப்பட்ட தற்காலிக கிரிக்கெட் தடையை நீக்குவது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை பரிசீலனை செய்து வருகின்றது.

அவுஸ்திரேலியா நீதிமன்றத்தால் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டிலிருந்து கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார். இதையடுத்து அவரது தற்காலிக கிரிக்கெட் தடையை நீக்குவது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் அஸ்வின்

மும்பை, செப். 30

எதிர்வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் அனுபவ சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் இடம் பிடித்துள்ளார். முன்னதாக, அறிவிக்கப்பட்ட இந்திய அணியில் அஸ்வின் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

'உலகக் கிண்ணக் கிரிக்கெட்-2023' தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெற வுள்ளது. மொத்தம் 48 போட்டிகள். தொடரில் - இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

அண்மையில் நடந்து முடிந்த ஆசிய கோப்பை தொடரின் சுப்பர்-4 சுற்றின் போது இடது கை சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர் அக்சர் பட்டேல் காயமடைந்தார். இதன் காரணமாக ஆசிய கோப்பை தொடரின் இறுதிப் போட்டி மற்றும் அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவர் விளையாடவில்லை. இந்தச் சூழலில் அவர் காயத்தில் இருந்து குணமடையாத சூழலில் அஸ்வின் அணியில் இடம்பிடித்துள்ளார்.



இந்திய அணி: ரோஹித் சர்மா (அணித் தலைவர்), ஹர்திக் பாண்ட்யா (உப அணித் தலைவர்), ஷுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், கே.எல்.ராகுல், ஜடேஜா, ஷர்துல் தாகூர், பும்ரா, மொகமது சிராஜ், குல்தீப் யாதவ், மொகமது ஷமி, ரவிச்சந்திரன் அஸ்வின், இஷான் கிஷன், சூர்யகுமார் யாதவ்.



# நாடு திரும்பினார் டெம்பா பவுமா!

புதுடில்லி, செப். 30

சொந்த காரணங்களுக்காக தென்னாபிரிக்க அணியின் தலைவர் டெம்பா பவுமா இந்தியாவிலிருந்து மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி தனது முதன்மையானப் போட்டிக்கு முன்னதாக இரண்டு பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகிறது. ஒரு போட்டி நேற்று ஆப்கானிஸ்தானுடன் நடந்தது. இந்த நிலையில், மற்றைய போட்டி ஒக்ரோபர் 2ஆம் திகதி நடக்கவுள்ளது.

இந்த நிலையில், சொந்த காரணங்களுக்காக தென்னாபிரிக்க அணியின் தலைவர் டெம்பா பவுமா இந்தியாவிலிருந்து மீண்டும் நாடு திரும்பியுள்ளது அந்த அணிக்குப் பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சபை தரப்பில் கூறியவை வருமாறு,

தென்னாபிரிக்க அணியின் தலைவர் டெம்பா பவுமா சொந்த காரணங்களுக்காக நாடு திரும்பியுள்ளார். பயிற்சி ஆட்டங்களில் அணியை மார்க்ரம் வழிநடத்துவார். ஒக்ரோபர் 7 ஆம் திகதி இலங்கை அணிக்கு எதிரான முதல் போட்டியில் டெம்பா பவுமா மீண்டும் அணியில் இணைவார் எனக் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஆசிய விளையாட்டு போட்டி; சீனாவுக்கு 150 பதக்கங்கள்

ஹாங்ஸூ,செப்.30

ஆசிய விளையாட்டுப் போட்டியில் 150இற்கும் அதிகமான பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் சீனா முதலிடத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது.

19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 23 ஆம் தேதி சீனாவின் ஹாங்ஸூ நகரில் கோலாகலமாகத் தொடங்கியது. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கி 5 நாள்கள் முடிவடைந்துள்ள நிலையில், 150இற்கும் அதிகமான பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் சீனா முதலிடத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது.

பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள கொரியாவைக் காட்டிலும் இருமடங்கு அதிகமான பதக்கங்களை சீனா வென்று குவித்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சீனா கிட்டத்தட்ட 300 பதக்கங்களை வென்று ஆதிக்கம் செலுத்தியது. அப்போது சீனாவுக்கு போட்டியாக தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் விளங்கின. இந்த ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியிலும் கொரியா மற்றும் ஜப்பான்




ஆகிய நாடுகளே 2-வது மற்றும் 3-வது இடத்தில் சீனாவுக்குப் போட்டியாக உள்ளன.

பதக்கப் பட்டியலில் 153 பதக்கங்களுடன் (83 தங்கம், 46 வெள்ளி, 24 வெண்கலம்) சீனா முதல் இடத்திலும், 76 பதக்கங்களுடன் (20 தங்கம், 20 வெள்ளி, 36 வெண்கலம்) கொரியா இரண்டாவது இடத்திலும், 68 பதக்கங்களுடன் (16 தங்கம், 28 வெள்ளி, 24 வெண்கலம்) ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

(ஐ)

# சம்பியன்ஸ் கிண்ணத்துடன் ஓய்வு பெறுகிறார் சகிப்!

டாக்கா, செப். 30

பாகிஸ்தானில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு பிறகு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற உள்ளதாக பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரரும் அணித் தலைவருமான சகிப்-அல்-ஹசன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் வருகிற 2025 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்குப் பிறகு தனது சர்வதேச கிரிக்கெட் ஓய்வு முடிவை அறிவிப்பேன் என பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது:-

2025 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குப் பிறகு ஒருநாள் போட்டிகளில் ஓய்வு பெறுவேன். 2024 இருபது - 20 உலகக் கிண்ணத்துக்கு பிறகு இருபது -20 போட்டிகளில் ஓய்வு முடிவை அறிவிப்பேன். டெஸ்ட் போட்டிகளில் விரைவில் எனது ஓய்வை அறிவிப்பேன். நான் அனைத்து வடிவிலான போட்டிகளிலும் ஒன்றன்பின் ஒன்றாக ஓய்வு பெறுவேன். எனது ஓய்வு முடிவை 2025 ஆம் ஆண்டு சம்பியன் கிண்ணத் தொடருக்கு பிறகு அறிவிப்பேன். இந்த உலகக் கிண்ணத் தொடர் வரை மட்டுமே நான் பங்களாதேஷ் அணியின் அணிதலைவர் செயல்படுவேன்.

இந்த தருணத்தில் எனது தலைமைத்துவ ஆட்டத்துக்கு மதிப்பு சேர்ப்பதாக நான் நினைக்கவில்லை. நான் அணிக்காக 10 ஓவர்கள் வீச வேண்டும். அணிக்காக சிறப்பான துடுப்பாட்ட - களத்தடுப்பு திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். அதற்கு நான் தலைமையில் இருந்து வெளிவர வேண்டும். இந்த வயதில் நான் தலை மைத்துவத்தால் ஏற்படும் அழுத்தங்களை எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. நான் பங்களாதேஷ் அணிக்காக எனது பங்களிப்பை மகிழ்ச்சியாக வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.



# சீனா - நேபாளம் இடையே 12 ஒப்பந்தங்கள் கையெழுத்து: இந்தியா பற்றி நேபாள பிரதமர் கூறியது என்ன?

நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹல் பிரசந்தா ஏழு நாள் பயணமாக சீனா சென்றுள்ளார்.

சீனப் பிரதமர் லீ சியாங்கின் அழைப்பின் பேரில் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், செப்டம்பர் 23 ஆம் தேதி, தலைநகர் பெய்ஜிங் சென்றடைந்தார். செப்டம்பர் 30 வரை பிரசந்தாவின் சீனப் பயணம் தொடரும்.

நேபாளத்தின் பிரதமராக மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பிறகு பிரசந்தா சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.


முன்னதாக அவர் இந்த ஆண்டு மே 31 முதல் ஜூன் 3 வரை இந்தியா சென்றிருந்தார். கடந்த 2008 இல் நேபாளத்தில் முடியாட்சி முடிவுக்கு வந்த பிறகு, பிரசந்தா முதல்முறையாக நேபாளத்தின் பிரதமரானார். அவரது முதல் வெளிநாட்டு பயணம் சீனாவாக இருந்தது.

பிரசந்தாவுக்கு முன், முடியாட்சி முறையில் யார் பிரதமரானாலும், பாரம்பரியமாக அவர்களின் முதல் வெளிநாட்டுப் பயணம் இந்தியாவாகத்தான் இருக்கும். ஆனால் பிரசந்தா இந்த மரபை உடைத்தார்.

சீனாவின் புரட்சித் தலைவரான மாவோ சேதுங்கை தமது ஆதர்ச நாயகனாக அவர் கருதுகிறார்.

**சீனா -நேபாளம் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் என்ன?**

சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹல் பிரசந்தா, ஞாயிற்றுக்கிழமை அங்கு நடைபெற்ற நேபாள -சீன வர்த்தக உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.



அப்போது அவர், "நான் சீனாவுக்கு வரும் போதெல்லாம், இங்கு ஏற்பட்டுவரும் மாற்றங்கள் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றன. உள்கட்டமைப்பு முதல் மனித வள மேம்பாடு, வறுமை ஒழிப்பு, கல்வி, மருத்துவ சேவைகள் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் என அனைத்திலும் இந்த மாற்றங்கள் தெளிவாகத் தெரிகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில் சீனா வியத்தகு முன்னேற்றம் அடைந்துள்ளது" என்று பிரசந்தா பேசியிருந்தார்.

பிரசந்தாவின் இந்த பயணத்தின்போது சீனா மற்றும் நேபாளம் இடையே செப்டம்பர் 25 அன்று பல்வேறு துறைகள் சார்ந்த 12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

தலைநகர் பெய்ஜிங்கில் கையெழுத்தான இந்த 12 ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கில் உள்ளன.

விவசாயம், வர்த்தகம், உள்கட்டமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் சில நிறுவன சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த ஒப்பந்தங்களில் நேபாளம் மற்றும் சீனா இடையே சாலை இணைப்பை மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்களும் அடங்கும்.

நேபாளம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இரு நாடுகளும் இருதரப்பு உறவுகளை விரிவாக மதிப்பாய்வு செய்துள்ளதோடு, சீனா- நேபாளம் இடையே நிலவும் உறவுகள் குறித்து திருப்தி தெரிவித்துள்ளன.

பிபிஜ முகமை வெளியிட்டுள்ள செய்தியின்படி, உலகளாவிய புதிய பாதுகாப்பு கொள்கை மற்றும் உலகளாவிய நாகரிகம் தொடர்பாக சீன அதிபர் ஷி ஜின்பிங் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு நேபாளம் ஆதரவு அளிக்க வேண்டும் என்று சீன தரப்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் நேபாள பிரதமர் பிரசந்தா அதை தவிர்ப்பது போல் தோன்றியது.



**இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள்:**

நேபாளத்தின் திட்டக் குழுவிற்கும் சீனாவின் தேசிய வளர்ச்சி மற்றும் சீர்திருத்த ஆணையத்திற்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம்.

டிஜிட்டல் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பான ஒப்பந்தம்.

பசுமை மற்றும் குறைந்த கார்பன் வெளியீட்டை ஊக்குவிப்பதற்கான ஒப்பந்தம்.

விவசாயம், மீன்பிடி தொடர்பான ஒப்பந்தம்.

சீனாவுக்கும் நேபாளத்துக்கும் இடையே வர்த்தகம் மற்றும் கட்டண ஒப்பந்தத்தை மேம்படுத்துவது தொடர்பான கூட்டு தொழில்நுட்ப பணிக்குழு ஒப்பந்தம்.

ஹில்சா சிம்கோட் சாலை திட்டம் மற்றும் நேபாளம் - சீனா பவர் கிரிட் இணைப்பு திட்டம் தொடர்பான ஒப்பந்தம்.

**சீனா செல்வதற்கு முன் பிரசந்தா என்ன கூறினார்?**

சீனாவின் ஹாங்சோவுக்குச் செல்வதற்கு முன், நேபாளத்தின் பிரபல இணையதள செய்தி நிறுவனமான 'டெய்லிக் காந்திபூருக்கு' அந்நாட்டின் பிரதமர் பிரசந்தா பேட்டி அளித்திருந்தார்.

அப்போது பாதுகாப்பு தொடர்பான குழுவில் இணைவதற்கான வாய்ப்பை பிரசந்தா மறுத்திருந்தார்.

ஆனால் அதேநேரம், "உலகளாவிய புதிய பாதுகாப்பு கொள்கை மற்றும் உலகளாவிய நாகரிகம் தொடர்பாக சீனா முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. இதில் சேர எங்களுக்கு எந்த தயக்கமும் இல்லை," என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால், 'பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகளுக்குள் நாங்கள் நுழைய முடியாது," என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

அணிசேரா வெளியுறவுக் கொள்கையை நேபாளம் பின்பற்றுகிறது. யாருக்கும் அடிபணிய மாட்டோம் என்பதே எங்கள் கொள்கை.

அமெரிக்காவின் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களில் நேபாளம் இல்லை என்றால், வேறு எந்த திட்டத்திலும் நாங்கள் ஒரு பகுதியாக இருக்க முடியாது என்று பிரசந்தா தனது பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஆனால், லீ சியாங் மற்றும் பிரசந்தா இடையேயான சந்திப்புக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில் உலகளாவிய புதிய பாதுகாப்பு கொள்கை மற்றும் உலகளாவிய நாகரிகம் போன்ற பிரச்சனைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

காத்மாண்டு போஸ்ட்டில் வெளியான செய்தியின்படி, சீனா - நேபாளம் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில், பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி குறித்த எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், நேபாள பிரதமரின் சீன பயணத்துக்கு முன் இதுபோன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதுதொடர்பாக சீனாவின் தரப்பில் இருந்து இது வரை எந்த அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

அதேநேரம், நேபாளத்தின் இறையாண்மை, வளர்ச்சி மற்றும் தேசிய சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் சீனா தொடர்ந்து ஒத்துழைக்கும் என்று பிரசந்தாவிடம், சீன பிரதமர் லீ சியாங் உறுதியளித்துள்ளார்.

"சாலைகள், ரயில்வே, விமானப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம் என உள்கட்டமைப்புகளை மேம்படுத்த நேபாளத்திற்கு உதவ சீனா தயாராக உள்ளது" என்று சீனப் பிரதமர், நேபாள பிரதமருக்கு உறுதி அளித்துள்ளார்.



இருநாடுகளுக்கும் இடையே உள்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஏற்கனவே கையெழுத்தாகி உள்ளன.

பொக்காரா சர்வதேச விமான நிலையம் சீன நிறுவன உதவியுடன் கட்டப்பட்டது. இந்த திட்டம் ஜூலை 2017 இல் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக சீனா நேபாளத்திற்கு கடன் வழங்கியது.

**இந்தியா - சீனா உறவை நேபாளம் எப்படி எதிர்கொள்ளும்?**

தனது ஒரு வார சீன பயணத்தில், அந்நாட்டின் பிரபல 'குளோபல் டைம்ஸ்' நாளிதழுக்கு நேபாள பிரதமர் பிரசந்தா பேட்டியளித்தார்.

இந்த பேட்டியில் இந்தியா - சீனா உறவுகள் குறித்தும் அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது.

இந்தியா-சீனா இடையேயான உறவைக் கருத்தில் கொண்டு நேபாளம் அதை எப்படி எடுத்துக் கொள்ளும் என்று பலர் கவலை தெரிவிக்கின்றனர் என்றும் பிரசந்தாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு அவர், 'இந்தியா மற்றும் சீனாவுடனான நேபாளத்தின் உறவுகள் அணிசேரா வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையிலானது. அண்டை நாடுகளுடன் அமைதியான சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுடனும் நேபாளம் சுதந்திரமான உறவைப் பேணி வருகிறது," என்று பிரசந்தா பதிலளித்தார்.

"ஒரு நாட்டுடனான நேபாளத்தின் உறவு மற்றொரு நாட்டை பாதிக்காது. நேபாளத்தின் நெருங்கிய நண்பர்களாக திகழும் இந்தியா மற்றும் சீனா, எங்களது நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன.

எனவே இரு நாடுகளுடனும் உறவுகளை தொடர்வோம். எந்தவொரு நாட்டுடனும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் அவற்றைத் தீர்ப்போம்" என்றும் பிரசந்தா கூறினார்.

கடந்த 1962இல் நடைபெற்ற இந்தியா - சீனா போரின் போது நேபாளம் நடுநிலை வகித்தது. யாருடைய பக்கமும் செல்ல மறுத்துவிட்டது.

பிரசந்தா மேலும் கூறுகையில், 'நேபாளத்துக்கும், இந்தியா மற்றும் சீனா இடையிலான உறவுகள் தெளிவாக உள்ளன. இரு நாடுகளுடனும் நல்ல நட்புறவை நாங்கள் விரும்புகிறோம். மேலும் இரு அண்டை நாடுகளுக்கும் இடையே நட்புறவைக் காண விரும்புகிறோம்,"

"இந்தியா மற்றும் சீனா இடையிலான உறவுகள் நேபாளத்துக்கும் உதவும். இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்தவும், நெருக்கத்தை அதிகரிக்கவும் தனிப்பட்ட முறையில் நான் உறுதி பூண்டுள்ளேன்.

இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் நலன்களையும் நேபாளம் மதிக்கிறது. மூன்று நாடுகளுக்கும் பயனளிக்கும் வளர்ச்சியை நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்றும் குளோபல் டைம்ஸுக்கு அளித்த பேட்டியில் நேபாள பிரதமர் பிரசந்தா கூறியுள்ளார்.

# அ.தி.மு.க.வின் கூட்டணியை இழந்ததால் பா.ஜ.க.வுக்கு என்ன பாதிப்பு?

இம்ரான் குரேஷி

இரண்டே நாட்களில், பாரதிய ஜனதா கட்சி கர்நாடகாவில் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளது, தமிழ்நாட்டில் ஒரு கூட்டணிக் கட்சியை இழந்துள்ளது.

கர்நாடகாவில் மதச்சார்பற்ற ஜனதா தளத்தை (ஜேடிஎஸ்) தனது கூட்டணிக் கட்சியாக அறிவித்துள்ளது.

அதேசமயம், தமிழகத்தில் அ.தி.மு.க.வுடனான கூட்டணியை முறித்துள்ளது. இது உண்மையில் மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்தக் கேள்விக்குக் காரணம், 2019-ல் கூட்டணி அமைவதற்கு முன்பே, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், குறிப்பாக மாநிலங்களவையில் சமீப காலம் வரை பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை இருக்கவில்லை. அதனால் அதற்கு அ.தி.மு.க தேவைப்பட்டது. முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கு பா.ஜ.க.வுக்கு இந்த ஆதரவு தேவைப்பட்டது.

பா.ஜ.க-அ.தி.மு.க கூட்டணி பிரிந்ததற்கான விதையை பா.ஜ.க.வின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை விதைத்தார். அவர் கூட்டணிக் கட்சித் தலைமையை மட்டும் விமர்சிக்காமல், திராவிடக் கட்சிகளின் தந்தையாகக் கருதப்படும் சி.என்.அண்ணாதுரை, மற்றும் மறைந்த தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க.வின் முன்னாள் பொதுச்செயலாளருமான ஜெயலலிதா போன்றவர்களையும் தாக்கிப் பேசினார்.

ஒரு கட்சியின் மாநிலத் தலைவருக்கு, அதிகாரம் மிக்க மத்தியத் தலைமையின் அனுமதியின்றி கூட்டணிக் கட்சியின் தலைவர்களை தாக்கிப் பேசும் அளவுக்கு துணிச்சல் இருக்குமா என்பது இப்போது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அ.தி.மு.க.வின் தலைவர்கள், பா.ஜ.க.வின் தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவைச் சந்தித்த பின் தான் கூட்டணி முறிவு குறித்து அறிவித்தனர்.

**இந்த நகர்வு பா.ஜ.க.வின் அரசியல் வியூகமா?**

இதுபற்றிப் பேசிய மூத்த பத்திரிகையாளரும், அரசியல் விமர்சகருமான ஏ.எஸ். பன்னீர்செல்வன், இது கூட்டணி பிளவு அல்ல, ஒரு அரசியல் வியூகம், என்றார்.

“இது அசாதுதீன் ஓவைசி (ஏ.ஐ.எம்.ஐ.எம்) உத்தரப் பிரதேசத்திற்குச் சென்று முஸ்லிம் வாக்குகளை பிரிப்பதற்கு ஒப்பானது. இது உத்தவ் தாக்கரே விலகிச் செல்வது போல் இல்லை. நட்டாவைச் சந்திக்க அ.தி.மு.க தலைவர்கள் டெல்லி வரை செல்ல வேண்டியிருந்தது. பா.ஜ.க.வின் உத்தி தெளிவாக உள்ளது, அதற்கு அண்ணாமலை வெறும் சாக்கு மட்டும்தான்,” என்று கூறுகிறார் அவர்.

ஆனால் கர்நாடகாவில், பா.ஜ.க, 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளின் வியூகத்திற்குத் திரும்பியுள்ளது.

முன்னாள் பிரதமர் தேவே கவுடா மற்றும் அவரது மகனும், முன்னாள் முதல்வருமான குமாரசாமி தலைமையிலான ஜே.டி.எஸ் உடன் கூட்டணி அமைத்திருக்கிறது.

25 ஆண்டுகளுக்கு முன்பு, ராமகிருஷ்ண ஹெக்டேவின் லோக் சக்தி கட்சியுடன் கூட்டணி அமைத்து, பா.ஜ.க மக்களவையில் சுலபமாக நுழைந்தது.

இந்த இரண்டு தேர்தல்களும் கர்நாடகாவின் தேர்தல் வரலாற்றின் மிக முக்கியமான ஒரு பகுதியாகும். இது ஒரு பிராந்தியக் கட்சியின் வெகுஜன மக்கள் தலைவரிடமிருந்து ஒரு தேசிய கட்சிக்கு வாக்குகளை மாற்றுவதற்கான சிறந்த எடுத்துக்காட்டு. ஹெக்டே முதலில் லோக் சக்தி கட்சியின் தலைவராகவும், பின்னர் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவராகவும் செயல்பட்டு, அந்த இரண்டு தேர்தல்களிலும் தனது லிங்காயத் வாக்குகளை பா.ஜ.க.வுக்கு மாற்றினார்.

இப்போது, மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் கூட்டணி வைப்பதன் மூலம், கர்நாடகாவின் தென் மாவட்டங்களான கோலார், துமகுரு, சிக்கபள்ளாப்பூர், மாண்டியா, பெங்களூரு (ரூரல்), சாமராஜநகர் மற்றும் ஹசன்



ஆகிய மாவட்டங்களில் ஆதிக்கம் செலுத்தும் சமூகமான வொக்கலிகாக்களின் வாக்குகளைப் பெற்று, தனது பழைய வெற்றியை மீண்டும் பெற முயற்சிக்கிறது.

அரசியல் ஆய்வாளரான பேராசிரியர் சந்தீப் சாஸ்திரி, “இந்த முறை பா.ஜ.க 24 இடங்களில் போட்டியிடுவதாகத் தெரிவித்துள்ளது. அதாவது 2019-ல் வெற்றி பெற்ற தொகுதிகளை விட ஒரு தொகுதி குறைவு. 2023-இன் நிலைமை 2019-ல் இருந்து வெகுவாக வேறுபட்டது என்பதை இந்த எண்ணிக்கை காட்டுகிறது,” என்கிறார் அவர்.



**அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணி உடைந்ததால் தமிழகத்தில் யாருக்கு லாபம்?**

பா.ஜ.க.வின் தமிழக மாநிலத் தலைவரான அண்ணாமலைக்கும், அ.தி.மு.க பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமிக்கும் இடையேயான மோதலின் முக்கியக் காரணம், இருவருமே மேற்கு தமிழகத்தில் இருந்து வந்தவர்கள் என்பதும், அங்கிருக்கும் ஆதிக்கச் சமூகமான கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தான் என, தமிழக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.



“ஆனால், அண்ணாமலை தமிழகத்தில் பா.ஜ.க.வின் மீதான பார்வையை விழச்செய்திருக்கிறார். அதனால் கட்சியின் மத்தியத் தலைமை அவரை ஆதரிக்கிறது,” என்று அரசியல் ஆய்வாளர் டி சுரேஷ் குமார் கூறினார்.

மேலும் பேசிய அவர், பா.ஜ.க மறும் அ.தி.மு.க தங்களுக்குள் வாக்குகளைப் பிரித்துக் கொண்டால், லாபம் தி.மு.க.வுக்குத்தான் என்கிறார். “அதாவது மோசமான ஆட்சி, அல்லது மிகப்பெரும் ஊழலால் ஆளும் தி.மு.க.வுக்கு எதிராக மிகப்பெரிய அலை வீசாத பட்சத்தில் தி.மு.க.தான் இந்தச் சூழ்நிலையில் லாபமடையும்,” என்கிறார் அவர்.

ஆனால், இப்போதைய நிலைமையில் அப்படி நடப்பதுபோல் தெரியவில்லை என்கிறார் அவர். “பா.ஜ.க.வைப் பொறுத்தவரை, அது தனது வாக்குச் சதவீதத்தை மேம்படுத்தினால், அது போதுமானதாக இருக்கும். ஆனால், அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை, எடப்பாடி பழனிசாமி வெற்றி பெற வேண்டும். இல்லையெனில், அவரது தலைமைக்கு அது சவாலாக இருக்கும்” என்கிறார் சுரேஷ் குமார்.

தேர்தலுக்குப் பின் அ.தி.மு.க மத்தியில் ஆளும் பா.ஜ.க.வை ஆதரிக்கக்கூடும் என்ற கருத்தில் பன்னீர் செல்வனும் சுரேஷ் குமாரும் உடன்படுகின்றனர்.

“ஆனால், எடப்பாடி, ஆந்திராவின் ஜெகன் மோகன் ரெட்டியைப் போன்றவரல்லர். வித்தியாசமானவர். ரெட்டி ஆந்திராவில் முதன்மை அரசியல்வாதி. தமிழகத்தில் எடப்பாடி அப்படி இல்லை. அ.தி.மு.க.வின் வாக்கு சதவீதத்தை அதிகரிக்கக் கூட்டணி தேவை,” என்கிறார்



அவர்.

2021-ஆம் ஆண்டின் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியை எடப்பாடி பழனிசாமி சிறப்பாக வழிநடத்தினார், என்கிறார் அவர். கூட்டணி பெற்ற 75 இடங்களில் அதிமுக 66 இடங்களைப் பெற்றது.

“2019-இல் மக்களவைத் தேர்தலில் ஏற்பட்ட இழப்பை அவர் ஈடுகட்டினார். அதாவது 39 மக்களவைத் தொகுதிகளில் தி.மு.க 38 இடங்களை வென்ற தேர்தல். அதன் பிறகு, கட்சித் தலைவர்கள், தொண்டர்கள் யாரும் கட்சியை விட்டு வெளியேறவில்லை. உண்மையில், கூட்டணி உடைந்தது என்று அறிவிக்கப்பட்டபோது, அ.தி,மு.க தொண்டர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் பாஜகவை ஒரு சுமையாகப் பார்க்கிறார்கள். அ.தி.மு.க.வின் வைத்து அண்ணாமலை வளர்ச்சியடைவார் என்று தொண்டர்கள் நம்புகிறார்கள்,” என்று சுரேஷ் குமார் கூறுகிறார்.

**கர்நாடகாவில் மாநில தலைமையை நம்பாத பாஜக**

ஆனால், கர்நாடகாவில் மதச்சார்பற்ற ஜனதா தளத்துடனான கூட்டணியை அறிவித்ததில், பா.ஜ.க தனது கர்நாடகா மாநிலத் தலைமைக்கு வேறு வகையான செய்தியைச் சொல்லியிருக்கிறது.

பேராசிரியர் சாஸ்திரி கூறுகையில், இந்தக் கூட்டணி, கர்நாடகா மாநிலத் தலைமையின் ஈடுபாடில்லாமல், தேசிய அளவில் பேசி முடிவு செய்யப்பட்டது, தேசியத் தலைமைக்கு மாநிலத் தலைமையின் மீது நம்பிக்கை இல்லாததைக் காட்டுகிறது, என்கிறார் அவர்.

“இது, கர்நாடகாவில், கட்சியின் பாதையை தேசியத் தலைமை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது என்று கூறுகிறது,” என்கிறார் அவர்.

**1998 மற்றும் 1999 ஆண்டுகள் போல, மாநிலக் கட்சிகளின் வாக்கு பா.ஜ.க.வுக்குச் செல்லுமா?**

“1999-ல் 50 வீத வாக்குகள் பா.ஜ.க.வுக்குப் போனதும், மீதமுள்ள வாக்குகள் ஐக்கிய ஜனதா தளத்திடம் இருந்து காங்கிரஸூக்குப் போனதும் நடந்தது. இந்த முறை என்ன சதவீத வாக்குகள் கிடைக்கும் என்பதை பார்க்க வேண்டும். இரண்டாவதாக, பா.ஜ.க.வில் வாக்குகள், அதன் கூட்டணிக் கட்சிகளுக்குச் செல்லாத வகையில் இந்தச் சமன்பாடு உள்ளது என்பதும் அனுபவம் நமக்குக் காட்டுகிறது,” என்கிறார் அவர்.

மைசூர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் அரசியல் துறைப் பேராசிரியர் முசாபர் அசாதி, பேசுகையில், பா.ஜ.க கூட்டணியில் மதச்சார்பற்ற ஜனதா தளம் சேர்ந்ததற்குக் காரணம், இந்தியா கூட்டணியால் அக்கட்சி புறக்கணிக்கப்பட்டதுதான், என்கிறார்.

“அவர்கள் முன்பு தேசிய ஜனநாயகக் கூட்டணியால் புறக்கணிக்கப்பட்டனர். தாங்கள் ஓரங்கட்டப்பட்டதாக உணர்ந்தனர். அவர்களின் அடித்தளமும் வேகமாக பலவீனமடைந்தது. மதச்சார்பற்ற ஜனதா தளம், தான் பா.ஜ.க.வுடன் செல்வதறகான காரணமாக முஸ்லிம்கள் தங்களை ஏமாற்றியதாகக் குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இது ஒரு மிகைப்படுத்தல். மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கை குறைவு என்பது தெளிவாகத் தெரிகிறது,” என்கிறார் அவர்.

2023 கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 55 வீதம் முதல் 70 வீதம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்றது. பா.ஜ.க 10 வீதம் பெற்றது. ஆனால் மதச்சார்பற்ற ஜனதா தளம் 20 வீதம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்றது, என்கிறார்.

பேராசிரியர் அசாதி மேலும் கூறுகையில், “இதுவரை கர்நாடகாவில் இரண்டரை கட்சி அமைப்பு இருந்தது. இனி அது இரு கட்சி அமைப்பாக குறைக்கப்படலாம்,” என்றார்.

# அஸ்வெசும திட்டத்தை ஆரம்பிக்கும் முன் வறுமை கோட்டை கண்டறிய வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, செப். 30

அஸ்வெசும திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் நாட்டிலுள்ள ஒரு குடும்ப அலகின் வருமானம் மற்றும் செலவு கணக்கெடுப்பு நடத்தி வறுமைக் கோட்டை கண்டறிந்து ஏழை, எளியவர்களை கண்டறிந்து அதை செயல்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இங்கு எத்தகைய விஞ்ஞானபூர்வ தன்மையின்றி 20 இலட்சம் பேர் தெரிவு செய்யப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மூலம் பல்வேறு வேலைத்திட்டங்களுக்காக எமது நாட்டுக்கு வழங்கப்படும் பணம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அரசாங்கத்தில் எல்லாமே எதிர் திசையிலே நடந்துள்ளதாகவும், முதலில் செய்ய வேண்டிய காரியங்களை செய்யாமல் அஸ்வெசும திட்டத்தை நிறைவேற்றியதால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதகங்களை சந்தித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், முறைமையில் மாற்றம் வர வேண்டும் என்று தரவுகளை மையமாகக் கொண்ட அறிவியல் முறைகளை கடைப் பிடிக்க வேண்டும் என்று தம்பட்டம் அடித்தாலும், அது நடைமுறையில் இல்லை என்றும், இந்தத் திட்டம் சிறப்பாக இருந்தாலும், திட்டத்தில் கடுமையான குறைபாடுகள் சிக்கல்கள் உள்ளன என்றும், இது தொடர்பில் பல தடவைகள் தடைகளுக்கு மத்தியிலும் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவதற்கு முன்பே வறுமைக் கோட்டை கணக்கிட வேண்டும் என்றும் தரவுகள் மற்றும் தகவல்கள் இல்லாமல் ஏழ்மையான மக்களை தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுமாயின் இந்த வேலைத்திட்டம் கூட தவறான வழியில் நடைமுறைப் படுத்தப்படலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நமது நாட்டில் கிராமப்புற, நகர்புற மற்றும் தோட்டத் துறைகளில் சுமார் 60 இலட்சம் குடும்பங்கள் உள்ளன என்றும் இவர்களின் வருமானம் கூட வேறுபட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவுகளைக் கணக்கிட்டு வறுமையை வரையறுக்க விஞ்ஞான பூர்வ முறை உருவாக்கப்பட வேண்டும் என்றும், இது பல அரசாங்கங்கள் செய்த பாரிய தவறு எனவும்,இதனை இவ்வாறு வரையறுப்பதற்கு கூட தாம் எதிர்ப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், பேராட்டத்திற்குப் பிந்தைய காலத்தில் அதிகாரிகள் மற்றும் சமுர்த்தி குறித்து விமர்சனங்கள் இருந்தாலும் இந்த அதிகாரிகளைப் பற்றி எதிர்மறையான கருத்துக்களை எடுக்காமல்,அவர்களைப் பயன்படுத்தி,தேசிய உற்பத்தி செயல்முறைக்கு நல்ல மதிப்பைச் சேர்த்து, நாட்டின் முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக மாற்றலாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

# கிழக்கு பல்கலைக்கழகம் பொதுமக்கள் பார்வைக்கு!

மட்டக்களப்பு, செப். 30

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகம் ஒக்ரோபர் மாதம் தனது 37ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. இதனடிப்படையில் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 8ஆம் திகதிவரை பல்கலைக்கழக வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரத்தை சிறப்பிக்கும் வகையில் இப்பிராந்தியத்தில் உள்ள பொதுமக்களுக்காக ஒக்டோபர் 3ஆம் திகதி “திறந்த தினம்“ எனும் பெயரில் ஒரு தினத்தை நடத்த பல்கலைக்கழக சமூகம் முடிவு செய்துள்ளது. இந்நிகழ்வு இப்பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகம் அப்பிராந்திய வளர்ச்சிக்கான ஒரு இயந்திரமாக செயல்படுகிறது. திறந்த தினம் என்பது பொதுமக்கள் பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்க்கவும், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அமர்வுகளில் பங்கேற்கவும் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பரந்த அளவிலான கல்வித் திட்டங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெறவும் வாய்ப்பை ஏற்படுத்தவுள்ளது.



இச்சிறப்பு நிகழ்விற்கு பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள் மற்றும் சிறுதொழில்துறையினர் சார்ந்த சமூகத்தை பல்கலைக்கழகத்திற்கு வருகை தருமாறு பல்கலைக்கழக நிருவாகம் அழைப்பு விடுக்கின்றது. இத்தினத்தில் பங்குபற்றுவோருக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக பெறுமதியான விளக்கவுரைகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை, அறிவியல் சோதனைகள் தொடர்பான நடைமுறை விளக்கங்கள் மற்றும் செயல் விளக்கங்கள், கல்விச் சூழலின் கண்ணோட்டம், நூலக வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவூட்டல், பல்கலைக்கழக மாணவர் அனுமதி நடைமுறை குறித்த வழிகாட்டுதல், பல்கலைக்கழக வாழ்க்கை மற்றும் கல்வி வாழ்க்கையின் வேறு அம்சங்கள் போன்ற விடயதானங்களில் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இச்சிறப்பு நிகழ்வில் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பிற சமூகங்களின் பங்கேற்பை பல்கலைக்கழக சமூகம் வரவேற்கின்றது. இதனூடாக பொதுமக்கள் பல்கலைக்கழக நடைமுறை தொடர்பான அவர்களது வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)

